நூல்—அஞ்சல்
BOOK-POST

திருவள்ளுவர் ஆண்டு 2039

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி :102 பகுதி :2 பெப்ரவரி-08





தை முதல் நாளைதமிழ்ப் புத்தாண்டாக அறிவித்த
முத்தமிழறிஞர், செம்மொழி கண்ட செம்மல், பொன்விழா நாயகர்
**மாண்புமிகு தமிழக முதல்வர்**
**டாக்டர் கலைஞர் அவர்களுக்கும்,**
**தமிழக அரசுக்கும்**
மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தின்
பாராட்டுதல்களும், நன்றிகளும்

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

பெப்ரவரி-08

## செந்தமிழ்க் கல்லூரியில் திருமழிசையாழ்வார் பற்றி தேசியக் கருத்தரங்கு




திருமலை திருப்பதி தேவஸ்தானம் ஆழ்வார் பிரபந்தத் திட்டமும், மதுரை செந்தமிழ்க் கல்லூரியும் இணைந்து நடத்திய தேசியக் கருத்தரங்கம் ஜனவரி 23, 24 ஆகிய இரண்டு நாட்களில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவினைச் செந்தமிழ்க் கல்லூரிச் செயலாளர் திரு. இரா. குருசாமி அவர்கள் தலைமையேற்றுத் தொடங்கி வைத்தார். கல்லூரி முதல்வர் முனைவர். க. சின்னப்பா அனைவரையும் வரவேற்றார். இத்திட்டத்தின் சிறப்பு அதிகாரி பேராசிரியர் க. சர்வோத்தமராவ் இத்திட்டத்தினை அறிமுகப்படுத்தினார். மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பேராசிரியரும், ஆட்சிக்குழு உறுப்பினருமான முனைவர் இரா. மோகன் சிறப்புரை வழங்கினார். மதுரைக் கல்லூரிப் பேராசிரியர் முனைவர் அரங்கராசன் மையக் கருத்துரை வழங்கினார்.

இரண்டு நாட்களும் நடைபெற்றகருத்தரங்கில் மதுரைக் கல்லூரி கணிதவியல்துறைப் பேராசிரியர் என். கண்ணன், தியாகராசர் கல்லூரிப் பேராசிரியர் என். கருணாமூர்த்தி, மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பேராசிரியர் மு. மணிவேல், முதல்வர் க. சின்னப்பா, முனைவர் நிர்மலா மோகன், முனைவர். வீ. காந்திமதி, முனைவர். பழனியம்மாள், தெலுங்கு மொழித்துறைப் பேராசிரியர் ஜெயப்பிரகாஷ், திரு. சடகோபன் ஆகியோர் கட்டுரைகள் வழங்கினர். பிரமுகர்களும், பிறகல்லூரிகளிலிருந்து பேராசிரியர்களும், மாணவர்களும் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

நிறைவு விழா தமிழ்ச் சங்கச் செயலர் திரு. இரா. அழகுமலை அவர்கள் தலைமையில் நடந்தது. உலகத் திருக்குறள் பேரவைத் தலைவர் தமிழ்ச்செம்மல் ந. மணிமொழியனும், மதுரைக் கம்பன் கழகத் தலைவர் திரு. சங்கர சீத்தாராமனும் வாழ்த்துரை வழங்கினர். சென்னைப் பேராசிரியர் இராமதேசிகன் நிறைவுரையாற்றினார். இக்கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் நிர்மலா மோகன் நன்றி கூறினார்.

# செந்தமிழ்

(தோற்றம் 1902)


தொகுதி : 102
பகுதி : 2
*பெப்ரவரி* 2008

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2039




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 ★ THE MADURAI TAMIL SANGAM ★

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |


ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர் – மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–625 001.

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ., எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–625 001.

# பொருளடக்கம்


**இதழ்மணம்** 45

**வெட்கம் வேண்டாமா?** 47
கவிவேந்தர் கா. வேழவேந்தன்

**திருக்குறளும் ஞானசம்பந்தரும்** 48
பேராசிரியர் சுப. அண்ணாமலை

**வரலாற்று நோக்கில் தமிழும், மலையாளமும்** 51
செ. வை. சண்முகம்

**சமணசமய நெறிகளும், சித்த மருத்துவமும்** 55
முனைவர். மரு. சே. பிரேமா
மரு.ச.. ரங்கராசன் எம்.டி. (சித்தா) பிஎச்.டி.

**குறவஞ்சி** 61
பேராசிரியர். சதாசிவம்
செந்தமிழ்ப் பதிப்பாசிரியர்

**திருப்பாவை காட்டும் கண்ணன்** 64
முனைவர். மு. மீனா

**சீவான்மா** 75
மு. வேங்கடசாமி நாட்டார்

# இதழ்மணம்

கவிவேந்தர் கா. வேழவேந்தன் அவர்கள், "வெட்கம் வேண்டாமா?" என்னும் தலைப்பில் கவிதை படைத்துள்ளார்கள். அக்கவிதை நீண்ட நெடிய சிந்தனைக்குரியது.

அடுத்துப் பேராசிரியர் **சுப. அண்ணாமலை** அவர்கள் எழுதிய "திருக்குறளும் ஞான சம்பந்தமும்" என்னும் அரிய கட்டுரை ஒன்று இவ்விதழில் இடம் பெறுகிறது. தலைப்பே குறிப்புப் பொருள் உணர்த்துவதை உற்று நோக்குவோர் உணரலாம். திருக்குறள் ஞானசம்பந்தம் உடையது என்பதைத் திருக்குறள் படிப்பவர்கள் உணர்ந்து படிக்க வேண்டும் என்னும் கருத்தைப் பேராசிரியர் உணர்த்தும் பாங்கு எண்ணி இன்புறத்தக்கது.

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு" என்னும் குறள், செய்வான், செயல் எனத் தொடர்ச்சி கூறுவதோடு வள்ளுவர் அதனுள் ஒரு குறிப்புப் பொருளை அமைத்துள்ள நுட்பத்தை ஆசிரியர் அறிவுறுத்துகின்றார். உயிரின் தொடர்ச்சி அறிந்த பின் துன்ப நீக்கத்துக்குரிய முயற்சி வேண்டாமா? அம்முயற்சிதான் திருஞானசம்பந்தர் அறிவுறுத்தும் நெஞ்சம் நைந்து நினைந்து உருகும் **உணர்வு அலைகள்**, உள் குழைந்து உருகல் வேண்டும் என்பதாகும். திருக்குறள் இலக்கணம்; அதற்குரிய இலக்கியமாகப் பிற்காலத்துத் தோன்றிய நூல்கள் எல்லாம் திருக்குறள் கருத்தை வலியுறுத்தின. இதனை வள்ளல் பெருமானும்,

**"உறங்குவது போலும் என்ற ஒண்குறளின் வாய்மை**
**மறங் கருதி அன்றோ மறந்தாய்"**

என அறிவுறுத்துகின்றார்.

பேராசிரியர் சுப. அண்ணாமலை அவர்கள் தமிழ் இலக்கிய ஆசிரியராக மட்டும் இல்லாமல் வாழ்வும் உணர்வும் தமிழ் என வாழும் பேரெழில் வாழ்க்கை உடையவர். அப்பெரியார் நீண்ட ஆயுளும் நோயற்ற வாழ்வும் பெற்று தமிழ் மாணவர்களுக்கு இதுபோல் அரிய கட்டுரைகள் அளிக்கத் திருவருள் துணை நிற்க வேண்டுவதன்றி அப்பெரியாருக்கு வேறு என்ன கைமாறு செய்ய இயலும்.

அடுத்துப் பேராசிரியர் மொழியியல் அறிஞர் *செ.வை. சண்முகம்* அவர்கள் "வரலாற்று நோக்கில் தமிழும்

மலையாளமும்" என்னும் கட்டுரை அளித்துள்ளார். தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதுமுள்ள மொழியியல் அறிஞர்களும் மாணவர்களும் இவருடைய கட்டுரையை ஊன்றிப் படித்து ஆய்வுப் புலத்தை விரிவுபடுத்திக்கொள்ள உதவும் வகையில் பல்வேறு செய்திகளை உள்ளடக்கிக் கட்டுரையை வரைந்துள்ளார். கட்டுரை சிறிதாக இருந்தாலும் செய்திகள் சிந்தனைக்குரியனவாகும்.

அடுத்துப் பேராசிரியர் முனைவர் **மரு.சே. பிரேமா** அவர்களுடன் இணைந்து முனைவர். **மரு.ச. ரங்கராசன்** அவர்களும் எழுதிய "சமணசமய நெறிகளும், சித்த மருத்துவமும்" என்னும் கட்டுரை இடம் பெறுகிறது. இக்கட்டுரை முயன்று படித்து நுட்பம் தெளிதற்குரியதாகும். சமயம் அறஞ்செய்யும் ஆறுகளை வகுத்து மக்களினத்துக்குப் பயன்படுத்தியது என்பதைக் கட்டுரை வலியுறுத்துவது அறிதற்பாலது. மருந்து, மானிட உணர்வுப்புலம், நன்மை, தீமை இவை குறித்த செய்திகள் மருந்தோடும் நோயோடும் தொடர்புடையன என்பதை அறிந்துரைப்பது நினைவு கொள்ளத்தக்கது.

இதனைத் தொடர்ந்து, செந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியை முனைவர் மு. மீனா எழுதிய திருப்பாவை காட்டும் கண்ணன் என்னும் கட்டுரை இடம்பெற்றுள்ளது. பெண்பால் ஆழ்வாராகிய ஆண்டாள் கண்ணனிடத்து மையல் கொண்டு படைத்த திருப்பாவை இலக்கியத்தைக் கண்ணனை மையப்படுத்தி ஆராய்ந்துள்ளார். முனைவர் மு. மீனா அவர்கள். திருப்பாவையில் முப்பது பாசுரங்களில் அமையப்பெற்றிருக்கும் உள்ளடக்கம் சிறப்புக்களை வெளிப்படுத்துவதோடு பாவையின் உள் உணர்வுகளையும் இக்கட்டுரை புலப்படுத்துகிறது.

நுணுகி நுணுகி கண்ணனை ஆராய்ந்து புலப்படுத்தும் ஆண்டாள் கருத்துக்களை நுட்பமாக ஆராய்ந்து முழு அவதார நாயகனாகக் கண்ணன் திகழ்வதை இக்கட்டுரை புலப்படுத்துகிறது. எளிய நடையில் திருப்பாவையின் முழு ஆன்மீகத் தத்துவத்தையும் உண்மையையும் இக்கட்டுரை உணர்த்துகிறது.

நிறைவாகத் தமிழறிஞர் மு. வேங்கடசாமி நாட்டார் எழுதிய சீவான்மா என்னும் கட்டுரைம இடம்பெற்றுள்ளது. சைவசித்தாந்த சாஸ்திரங்களும் சைவ அனுபவமிக்க ஆன்றோர்களும் வெளிப்படுத்திய கருத்துக்களின் அடிப்படையும் சீவான்மா பற்றிய செய்திகளை நுட்பமாக உணரும் வகையில் எழுதி உள்ளார். இக்கட்டுரை அடுத்த இதழிலும் தொடர்ந்து வந்து மணம் பரப்பும்.

"செந்தமிழ் நலம் துய்த்து இன்புறுக".

# வெட்கம் வேண்டாமா?

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

எலிகளுக்கும் வளையுண்டு; பாம்பு வாழ
இல்லமெனப் புற்றுண்டு; கிளியை ஊட்டும்
புலிகளுக்கும் குகையுண்டு; வானில் நீந்தும்
புறாக்களுக்கும் கூடுண்டு; நாதி யற்று
நலிவுற்ற ஏழைமக்கள் சிலரோ இன்னும்
“நடைபாதை வாசிக” ளாய்க் குந்து தற்கும்
மலிவான குடிசையொன்றும் இன்றித் தேம்பி
மனமொடிந்து வாடுவதேன்? வெட்கம் வேண்டாம்.

கருமேகம் மழைபொழிய நம்மி டத்தில்
கையூட்டா கேட்கிறது? மலையி னின்றே
உருண்டுவந்து வயற்பயிரைச் செழிக்கச் செய்யும்
ஒயில்ஆறும் கைம்மாறு கேட்ப தேது?
கரும்பென்றும் நெல்லென்றும் வழங்கும் பூமி
கைமாமூல் என ஒன்றைக் கேட்ப துண்டா?
இரும்புமன மனிதரிங்கே கடமை யாற்ற
இலஞ்சங்கள் கேட்பானேன்? வெட்கம் வேண்டாம்?

ஆழ்கடலில் வாழ்மீனும் பசியால் வாடி
ஆருயிரை விடுவதுண்டா? வான கத்தில்
ஏழ்காதம் தாண்டிவரும் பறவை யொன்றும்
இரையின்றி மடிந்ததென்ற செய்தி உண்டா?
சூழ்வனத்து மான்ஒன்றும் தீனி யின்றித்
துறப்பதுண்டா இன்னுயிரை? ஆனால் இன்னும்
தாழ்வறியா உழவர்சிலர் வாழ்வே இன்றித்
தற்கொலைகள் புரிவதுமேன்? வெட்கம் வேண்டாம்?

# திருக்குறளும் ஞானசம்பந்தமும்

பேராசிரியர் சுப. அண்ணாமலை

நீரும் நீண்ட கயிறும் போல் தொடர்பு இல்லாதனவற்றை ஒப்பிடுவது பொது அறிவுக்குப் பொருந்தாது. ஆனால் வேதாந்த நூல்கள் பழுதையும் பாம்பையும் ஒப்பிடுகின்றன. பாம்பு அன்று, பழுதைதான் என ஒரு பொருளைத் தெளிவு செய்கின்றன. அது போல திருக்குறள் கருத்தையும் திருஞானசம்பந்தரின் தேவாரப் பாடலையும் ஒப்பிடுவது, ஒரு செய்தியைத் தெளிவுபடுத்துவதற்காகவே.

அண்ட வெளியில் மின் அலைகள் மிதந்தவண்ணம் உள்ளன. எத்துணையோ பொருள்கள் மின் அலைகள் ஆகின்றன. உலகில் எழும், எழுப்பப்படும் ஓசை மின் அலையாக மாறும். ஒளியும் அவ்வாறே. அவற்றுள் ஓசை–மின் அலை வானொலிப் பெட்டியில், மீண்டும் ஓசையாகிக் கேட்கப்படுகின்றது. ஒளி–மின் அலை தொலைக்காட்சிப் பெட்டியில், ஒளியாக மாறிக் காட்சியாகக் காணப்படுகின்றது.

அவற்றைப்போல் மாந்தரின், எண்ணம், உணர்வு, சொல், செயல் ஆகியவையும் வினையலைகள் ஆகி, மின் அலை ஆகின்றன. வினையலையையே கர்மக் கொள்கையில் கூறும் புண்ணியம், பாவம் என்று கொள்ளலாம். வினை அலை மாறிய மின் அலை, மாந்தரிடத்தில், காலக்கழிவில், அனுபவத்தை உண்டாக்குகிறது. அந்த அனுபவமே நன்மையும் தீமையும் . இதனை அவ்வையார், “புண்ணியம் ஆம் ; பாவம் போம்” என்று பாடினார். திருவள்ளுவர், வினைப்பயன் ஒருவனைத் தொடர்ந்து வந்து, தீமைசெய்தலை, “தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை வீயாது அடி உறைந்தற்று” என்று கூறுகின்றார். நிழல் வீயாது எனக் கூறுதலின், அது எப்போதும் தொடர்ந்து வரும் என்று விளங்குதல் போல, வினைப்பயனும், வினை செய்யப்பட்ட பிறவியிலேனும் அடுத்தடுத்த பிறவிகளிலேனும் தன் பயனைத் தரும் என்பது விளங்கும்.

ஒருவன் இறந்து, பிறகு பிறப்பதைத் திருவள்ளுவர், “உறங்குவது போலும் சாக்காடு, உறங்கி விழிப்பது போலும் பிறப்பு” என்று செய்தவன், செயல் ஆகியவற்றின் தொடர்ச்சியைக் கூறுகின்றார். அத்தொடர்ச்சியில் மற்றொரு தொடர்ச்சியும் குறிப்புப் பொருளாக மறைந்து நிற்கிறது. அது, ஒருவன் உறங்கச் செல்லும் போது, அவனது புத்தியில் நிற்கும் உணர்வு (இது கோபம் முதலிய உணர்ச்சி அன்று, உணர்ச்சி மறைந்துவிடும்; ஆனால் உணர்வு மறையாது.) மறுநாள் அவன் விழித்து எழும் போதும் இருக்கும் என்பதே ஆகும்.

உவமையால், ஒரு பிறப்பில் சேரும் வினையலை, மறுபிறப்பில் சென்று பயன் கொடுக்கும் என்று அறியப்படும். இஃது அடுத்துவரும் பிறவிகளுக்கும் பொருந்தும். கர்மக் கொள்கை உண்மை என்பதை இதனால் திருவள்ளுவர் உறுதி செய்கின்றார்.

அவர் கருத்தை மனத்துட் கொண்டு, திருஞான சம்பந்தரின் தேவாரப் பாடலை நோக்குவோம்.

அப்பாடல்,

> **“துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்**
> **நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்**
> **வஞ்சகம் அற்று அடி வாழ்த்த வந்த கூற்று**
> **அஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே”.**

திருவைந்தெழுத்தின் பெருமையை விளக்க விழைந்த திருஞானசம்பந்தர், அதனை ஒரு வரலாற்றால் விளக்குகின்றார். மார்க்கண்டேயன், மிருகண்டு முனிவருக்கு மகனாகப் பிறந்த போது, அவன் வாணாள் 16 ஆண்டுதாம் என்று அறியப்பட்டது. இதனைத் தந்தையிடம் கேட்டறிந்த மார்க்கண்டேயன் சிவபக்தி பூண்டு, நாள்தோறும் திருவைந்தெழுத்தை ஓதிச் சிவாலயத்தில் சிவலிங்கப் பெருமானை வழிபட்டு வந்தான். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி, திருவைந்தெழுத்தை இரவு பகலாக ஓதிவந்தான். சூரியன் மறக்கினும் அவன் வழிபாட்டை மறக்கவில்லை. முப்போதும் திருமேனி தீண்டி நீர்முழுக்கு, மலர்தூவல், ஊன் படைப்பு ஆகியன செய்து வந்தான்.

அவன் வயது நிறைவுற்றது. கால தேவன் தன் கடமையைச் செய்ய கையில் பாசக்கயிற்றோடு கருவறையில் தோன்றினான். அவன் வருகையை உணர்ந்த சிறுவன், சிறிதும் அஞ்சாது, இலிங்கப் பெருமானைத் தழுவி, அடைக்கலம் புகுந்தான். சிறியோரின் அடைக்கலத்தை ஏற்று, அவரைக் காத்தல் பெரியோரின் கடமை அன்றோ ?

காலதேவன் பாசக்கயிற்றை வீசினான். சிறுவனின் இறைவன்பிடி இறுகியது. கயிற்றுக்கு அவனது உயிர் வராமையைக் கண்ட காலதேவன், கயிற்றை மீண்டும் சுழற்றி, இலிங்கப் பெருமானையும் சேர்த்து இழுத்தான். அது மாபெருந்தவறு.

நிலை பெயர்ந்தது ஆவுடை ஆகிய பீடம். சும்மா இருப்பானோ இறைவன்? இராவணன் கைலாய மலையை அசைத்தபோது வாளா இருந்தானோ? பொங்கியது சினம். இலிங்கத்தில் தோன்றி, சூலாயுதத்தால் காலனைக் குத்தித் தள்ளினான். அதே சமயம் காலினால் உதைத்தான். அஞ்சி விழுந்தான் காலன்.

இவ்வரலாற்றினால், திருவைந்தெழுத்து ஓதல் மரணத்தை வெல்ல உதவும் என்று திருஞானசம்பந்தர் உணர்த்துகின்றார்.

மார்க்கண்டேயன் மரணத்தை வென்றது, இடைவிடாத திருவைந்தெழுத்து ஓதலால். இதனோடு திருவள்ளுவர் கூறியதை ஒப்பு நோக்கினால், ஒரு பிறவியில் திருவைந்தெழுத்தை மணங்கசிந்து ஓதிவந்தால், அந்த வினையலை மறுபிறவியில் தனது பயனைக் கொடுத்து, மரணத்தையும் வெல்லச் செய்கின்றது என்பது அறியப்படும் "கூற்று அஞ்ச உதைத்த" குறிப்பு அதுவாகும்.

விழித்திருக்கும் போது ஓதலாம்; உறங்கும் போது என்ன செய்வது? என வினவலாம். அதற்கும் முன்பு கூறிய பொதுவிதி பொருந்தும். உறக்கத்தின் முன் உள்ள அன்பு, கனவிலும், ஆழ்ந்த துயிலிலும், உயிர்ப்பு அடங்கிய நிலையிலும் நிற்கும். இவ்வாறு ஒருநாள் நிகழ்ந்தால், அதுவே வாணாள் எல்லாம் நிகழும். அதன் பயன் உள்ளங்கை "நெல்லிக்கனி".

உணர்வு இரவு பகல் இன்றித் தொடரும். அத்தொடர்ச்சி வினையலையாக அடுத்துவரும் பிறப்புக்களிலும் நீளும் என்னும் உண்மை, திருக்குறள் – தேவார ஒப்பு நோக்குதலால் பெறப்பட்டது.

# வரலாற்று நோக்கில் தமிழும், மலையாளமும்

செ. வை. சண்முகம்

தமிழும், மலையாளமும் அண்டை மாநில மொழிகளாக அமைந்திருந்தாலும் வரலாற்று நோக்கில் தமிழ் பேசும் ஒரு பெரிய மாநிலமாக அமைந்து, காலம் செல்லச் செல்ல கேரளப் பகுதியில் பேசிய மொழி பல தனித் தன்மைகளைப் பெற்றுத் தனிமொழியாக உருவாகியது என்பதை வரலாற்று நோக்கில் பார்க்கும் பொழுது புலனாகிறது.

தமிழ், மலையாள அறிஞர்கள் இந்த உண்மையை உணர்ந்திருந்தாலும் மொழி ஆராய்ச்சியை வரலாற்று நோக்கில் விளக்கும் பொழுது கருத்து மாறுபடுகிறார்கள். பெரும்பாலான தமிழ் அறிஞர்கள் தமிழ்த்தரவுகளை மட்டுமே விளக்க சில மலையாள அறிஞர்கள் ஒன்றிரண்டு ஒப்பிலக்கண உண்மைகளை மனதில் கொண்டு, தமிழ்த் தரவுகளை அலட்சியப்படுத்தி விட்டார்கள். மேலும் இரண்டு சாராருக்கும் வரலாற்று மொழியியல் அறிவு அதிகம் கிடையாது என்றே கருத வேண்டி இருக்கிறது. இந்த நிலையில் ஒப்பிலக்கண நோக்கிலும் வரலாற்று மொழியியல் நோக்கிலும் தமிழ் மலையாள உறவுகள் பற்றிய சில கருத்துக்கள் இங்கு முன்வைக்கப்படுகின்றன.

தமிழ்த்தரவுகளான சங்க இலக்கியங்களை, இடைக்கால பக்தி இலக்கியங்களைக் குறிப்பாக பல்லவர் கால இலக்கியங்களை நோக்கும் பொழுது, பழங்காலத்தில் கேரளா தமிழகத்தின் ஒரு பகுதியாக இருந்தது என்பது தெளிவாகிறது. மேலும் இடைக்காலத்தில் தமிழில் ஏற்பட்ட சில

*(கோடை, * கொடக்கு < குடக்கு)*

எகரம் இகரமாதல்

*(கேணி * கெணறு < கிணறு)*

போன்ற ஒலியியல் மாற்றங்களும் எண்ணுப்பெயரில்

ஒன்பதுக்குப்பிறகு வரும் பத்து நூறாகவும்

தொள்/பத்து தொண்+பத்து–தொண்ணூறு (தமிழ் X மலையாளம்)

நூறு ஆயிரமாகவும் மாறுவது

தொள் + நூறு – தொள்ளாயிரம் (தமிழ் X மலையாளம்)

அதே சமயத்தில் (தமிழிலிருந்து) பழைய திராவிடத்திலிருந்து சில வழக்குகள் கேரளப் பகுதியில் மாறியுள்ளன.

| தமிழ் | மலையாளம் |
|---|---|
| கீரை | சீரை |
| கயிறு | சகரி, சேரி |
| சிறுக்கன் | செறுக்கன் |
| வழித்தல் | வடி |

(மலையாளம்) பழந்திராவிடத்திலிருந்து மாறுபட்ட சில வழக்குகள் தமிழ்ப்பகுதியிலும் காணப்படுகின்றன.

| | |
|---|---|
| (சா) செத்து | சத்து (பழந்திராவிடம்) |
| எயிறு | எகிறு (பழந்திராவிடம்) |

போன்றவை காணப்படுவது இரண்டு வட்டார மொழிகளும் பழங்காலத்திலேயே சிறிய அளவில் மாறுபட்டிருப்பதைப் புலப்படுத்துகின்றன. மேலும் மெல்லினத்துக்குப் பிறகு பகரம் எண்ணுப் பெயர்களில் மட்டுமே (பதின்பர்–தொல்–திராவிடம்) (பதின்மர் –தமிழ் X மலையாளம்), எண்பர் – (தொல் – திராவி), எண்மர் (தமிழ் X மலையா) தமிழிலும், மலையாளத்திலும் மட்டுமே வர, மலையாளத்தில் மொழிமாற்றங்கள் கேரள நாட்டு மொழியிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்பதை மலையாள நூல்களும் புலப்படுத்துகின்றன. அதனால் கி.பி. 9ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்திலும் கேரளத்திலும் தமிழே வழங்கி இருக்க வேண்டும் என்பது பரவலாகத்தமிழ் அறிஞர்களால் கருதப்படுகிறது. ஆனால் L.V. ராமசாமி ஐயர் போன்ற மொழியியல்

அறிஞர்கள் இந்தக் கருத்தை ஒத்துக் கொண்டாலும் மலையாளம் வேறு சில தனித்தன்மைகளை உடையதாக இருந்திருக்க வேண்டும் என்று வற்புறுத்துவார்கள். அதாவது தமிழில் இல்லாத சில பழமையான மொழிக்கூறுகள் பழைய மலையாள காலத்திலேயே இருந்திருக்க வேண்டும் என்பது அவர்கள் கருத்து.

ஒப்பிலக்கண நோக்கில் பார்க்கும் பொழுது மேலே காட்டிய உண்மைகள் தெளிவாவதோடு மொழி வளர்ச்சி பற்றி சமூகஇயல் நோக்கில் சில உண்மைகளைப் புலப்படுத்துகின்றன. தமிழும் மலையாளமும் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகள் என்பதோடு, அவை நெருக்கமான உறவுடைய ஒரே உட்பிரிவை *(Sub-group)* சேர்ந்த மொழிகள் என்பதும் தெளிவாகி உள்ளன. அதாவது பிற திராவிட மொழிகளிலிருந்து வேறுபட்ட பல புதுமைக்கூறுகள் காணப்படுவது இரண்டு மொழியும் வேறுபடுத்தாத நிலையை அல்லது ஒற்றுமையைப் புலப்படுத்துகின்றன. உதாரணமாக இடை அண்ண உயிருக்கு முன்னால் வரும் ககரம் சகரமாதல் (செவி X கெவி) சொல்லின் இரண்டாவது உயிர் அகரமாக இருந்தால், ஒகரம் உகரமாகும். எதிர்கால விகுதியிலும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

| தமிழ் | மலையாளம் |
|---|---|
| ஈன்பர் | ஈன்மர் |
| உண்பர் | உண்மர் |

கேரளத்தமிழிலும் இந்த மாற்றம் காணப்படுகிறது. தமிழில் மேலும் சில வரலாற்று மாற்றங்கள் கேரளத்தமிழில் நீட்டிக்கப்பட்டுள்ளது. உதாரணமாகச் செய்வான், உண்பான் போன்ற வினை எச்சங்களிலும் பகரம் மகரமாக மாறிவிடும். உண்பான் < உண்மான்.

கேரளப்பகுதிக்கே உரிய சில மொழி மாற்றங்களும் இடைக்காலத்தமிழிலிருந்து கேரளத் தமிழை நன்றாக வேறுபடுத்திவிட்டன. – உதாரணமாக வல்லின மெல்லின மாற்றம் தேங்காய் – தேங்ஙா வினை முற்றிலும் திணை, பால், மரபு,

நாலாம் வேற்றுமை உருபாக னகர ஈற்றுப்பெயர்களில் உகரம் வருவது (அவனு – மலையா) 'அவனுக்கு' – இறந்த கால எதிர்மறை வடிவம் (செய்யாஞ்னு – மலையா) செய்யவில்லை – (தமிழ்) போன்ற சிறப்பு மாற்றங்களும் தமிழ்நாட்டுத் தமிழிலிருந்து கேரளமொழி மிகவும் மாறுபட்டுவிட்டது. மேலும் 10ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு நடைபெற்ற அரசியல் சமூகப் பண்பாட்டு மாற்றங்களும் மொழி உணர்வை அதிகம் பாதித்து தனிமொழியாக்க வேண்டும் என்ற எண்ணத்தை உண்டாக்கியது. வடமொழியின் வேற்றுமை உருபுகளில் கூட இலக்கியத்தை ஏற்றுக்கொள்ளலாம் என்ற அதீத வடமொழி உணர்வு இலக்கியத்திலும், வடமொழித் தாக்கத்தை மிகைப்படுத்தியது. அதனால் இலக்கிய நிலையிலேயே தமிழ் சார்ந்த இலக்கிய வகை (பாட்டு) வடமொழி சார்ந்த இலக்கிய வகை (மணிப்பிரவாளம்) என்ற இலக்கியத்திலும் இரட்டை நிலை ஏற்பட்டது. அது மொழியையும் பாதித்ததால் இரட்டைத்தழுவு வழக்கு (Bi-model standardization) ஏற்பட்டு இலக்கியங்களும் உருவாயின. அந்த இரட்டை நிலையில் இருந்து ஒற்றைத் தழுவு வழக்கு ஏற்பட இலக்கிய ஆசிரியர்களும் பாடுபட்டார்கள். அந்த நிலையில் முழு வெற்றி பெற்றவர் 17–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த எழுத்தச்சன் என்பவரே.

இந்த நோக்கில் பார்க்கும் பொழுது கேரளப் பகுதியின் மொழி, தமிழின் வட்டார வழக்குகளில் ஒன்றாக பழங்காலத்திலிருந்து அமைந்து பின்னரே பல புதிய மாற்றங்களைப் பெற்றுத் தனிமொழியாக உருப்பெற்றிருக்க வேண்டும் என்று முடிவு செய்யலாம்.

❄

# சமணசமய நெறிகளும், சித்த மருத்துவமும்

முனைவர். மரு. சே. பிரேமா
முனைவர். மரு.ச.. ரங்கராசன் எம்.டி. (சித்தா) பி.எச்.டி.
பேராசிரியர் மற்றும் தலைவர், சித்த மருத்துவத்துறை,தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**முன்னுரை**

சமணசமய நெறிகள் பல, சித்த மருத்துவர்களால் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. நீண்ட காலமாகவே சமண சமயத்திற்கும், சித்த மருத்துவத்துக்கும் தொடர்புள்ளது. சமணர்களின் நான்கு முக்கியக் கொள்கைகள் 1. உணவு வழங்குதல் 2. காத்தல் 3. மருத்துவம் 4. கல்வியைக் கற்றுத்தருதல் என்பனவாகும். இதில் மருத்துவத் தொண்டு செய்வதைச் சித்தர்கள் பின்பற்றினார்கள். சித்தர்கள் ஐம்பெரும் பிரிவுகளில் ஒருவராகக் கருதப்பட்டு வணங்கப்படுகின்றார்கள். 'சித்த பக்தி'[1] என்ற சமண நூல் சித்தர்களைப் போற்றும். மேலும் சித்தர்களைப் போற்றும் 'சித்தலோகம்' என்பது சமணர்களால் வணங்கப்பட்டு வருகின்றது.

சமண இலக்கியமான பெருங்கதையில் வரும் "யூகி" என்னும் பெயரைச் சித்தர்களில் ஒருவர் கொண்டுள்ளார். இவர் யூகி–வைத்திய சிந்தாமணி 800, வாதவைத்திய உலா போன்ற நூல்களைப் படைத்துள்ளார். இது சமண சமய இலக்கியத்தின் தாக்கத்திற்குச் சிறந்த சான்றாகும். இது போன்றே சிந்தாமணியின் பதுமையார் இலம்பகத்திற்குப் பொருள்கூறிய நச்சினார்க்கினியர், "சித்தராரூடச்சிந்து" என்னும் நஞ்சு நூலின் பெயரைக் கூறியுள்ளார். இதில் பாம்புகள் பற்றிய செய்திகள் விரிவாக இடம் பெற்றுள்ளன. எனவே, சமண இலக்கியங்களின் தாக்கம், மருத்துவத்தில் ஏற்பட்டது என்பது தெரியவரும்.

---

வடமொழி வளத்துக்குத் தமிழரின் பங்கு, மு.கு. சகன் நாதராசா – என்சிபிஹெச்

சமணர்கள், மருத்துவத்தைத் தொண்டாக மாற்றினார்கள். "சங்க காலத்தில் சிலரிடமே தொழிலாக இருந்த மருத்துவக்கலை சங்கம் மருவிய காலத்தில் பலரிடம் தொண்டாக மாறியது[2]". "ஔடதானம் மக்கள் வாழ்வுடன் ஒன்றியதால், சங்கம் மருவிய காலத்தில் மருத்துவக்கலை பெரிய மாற்றத்தைக் கண்டது"[3]. சமணர்கள் தங்கள் மடங்களில் மருத்துவத் தொண்டாற்றினார்கள். கேரளத்தில் ஆதிகாலம் முதல் மருத்துவர்கள் இல்லங்களுக்குச் சென்று மருத்துவம் செய்தார்கள். பின்னர் சைன மற்றும் புத்த மதத்துறவிகள் குடியேறிய போது, மடங்களில் மருத்துவத் தொண்டாற்றினார்கள். அம்மடங்களே, சுகாதார மையங்களானது[4]. பின்னாளில் இச்செயல்பாடே சுகாதார நிலையங்கள் தோன்ற, காரணிகளாக ஆயின.

"அகத்தியர் 12000" என்ற சித்த மருத்துவ நூலில் "சிறியதொரு நாடாகும் லச்சணந்தி[5]" என்று வருகின்றது. வெண்பாப்பாட்டியல் என்ற லச்சணந்தி மாலை ஓர் இலக்கண நூலாகும். இதன் ஆசிரியர் குண வீர பண்டிதர்.

"சமணத் துறவிகள் வல்லவர்களாக விளங்கி மருத்துவத் தொண்டாற்றியது, சமண சமய வரலாற்றில் முக்கிய இடம் வகிக்கிறது என்றால் அது மிகையாகாது" மலைகளிலும், குன்றுகளிலும், சமணத்துறவிகள் வாழ்ந்து மருத்துவம் செய்தார்கள்.

சமணர் வாழ்ந்த பாறைகள் தேய்ந்து, வழ வழப்பான உட்பகுதியை உடையனவாக இருப்பதிலிருந்தே, இலையும், மருந்து மூலிகைகளும் அரைக்கப் பயன்படுத்தப் பெற்றவை என்பது புலனாகிறது.

---

2. தமிழ் இலக்கியத்தில் சித்த மருத்துவம் முனைவர். க.வேங்கடேசன், பக்கம் 194, MLM பிரிண்டர்ஸ்.
3. மேலது – பக்கம் 194. MLM பிரிண்டர்ஸ் சென்னை – 1993.
4. தென்னிந்திய மருத்துவ வரலாறு – முனைவர். நிரஞ்சனாதேவி, பக்கம் 115, உ.த, பவர்மேன் பிரிண்டர்ஸ் 2004
5. அகத்தியர் 12000 – எஸ்.பி. இராமச்சந்திரன்5ஆம் காண்டம் பாடல் 243 பக்கம் 70, தாமரை நூலகம்

(கழுகு மலையில் சமணம் ஏ. ஏகாம்பரம், சைன இளைஞர் மன்றம், தன்யகுமார் பிரஸ், 1993) சுமார் கி.மு. 5ஆம் நூற்றாண்டு அளவில் சமணர் வடபுலத்திலிருந்து தமிழகம் வந்தார்கள் 'சைன மற்றும் புத்த சமயத்துறவிகளால் ஆயுர் வேத மருத்துவம் கேரளாவில் புகுமுன், மரபுவழியிலான மருத்துவம் இருந்தது. ஆயுர்வேதம், புகுந்த போது, தன்னுடைய தன்மையை மாற்றிக் கொண்டது. இவற்றை ஒப்பு நோக்க, கேரள ஆயுர்வேதத்தின் தனித்தன்மை புலப்படும்'. கேரளத்தின் இந்நிலை, தமிழகத்திற்கும் பொருந்தும். சித்த மருத்துவத்தின் கூட்டுறவால், ஆயுர்வேத மருத்துவத்தில் இரசவாதம் தொடர்பான கருத்துக்கள் பரவின.

"இவரது காலம் குலோத்துங்கன் ஆண்ட கி.பி. 1178–1218 காலமாகும்"[6]. இவர் தன்னுடைய ஆசிரியர் லச்சணந்தியின் பெயரை, தன்னுடைய படைப்புக்குச் சூட்டினார். பன்னிரு பாட்டியலின் பெருமையை உணர்ந்த, அகத்தியர், "லச்சணந்திநாடு" என்று ஓர்நாட்டைக் கூறுகின்றார்.

"அகத்தியர் தத்துவம் 300" என்னும் நூலில் சமணர்களும் அவர்களின் கொள்கைகளும் கூறப்பட்டுள்ளன. "கூறான சமண், மாயாவாதி, புத்தன் கூடுமட்ட, வாதிகளுக்குத்தத்துவம் மூவைந்தாம்[7]" சமணர்கள், மாயாவாதிகளான அத்துவைதத்தார், பௌத்தர்கள் ஆகியோரின் மெய்ப்பொருள் 15 என்பதாகும். மேலும் 'அகத்தியர் 12000' என்ற நூலில் பவணந்தியின் பெயர் வருகின்றது. பவணந்தி, நன்னூலின் ஆசிரியர். சமண சமயத்தவராவார். இவரைப்பற்றி "[8]தென்திசையில் வாழுகின்ற பவணந்தியப்பா

---

6. இலக்கணக் கருவூலம் – பாகம் III – பக்கம் 10. அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

7. அகத்தியர் தத்துவம் 300 – ஜி. இராமசாமிக்கோன், ஸ்ரீ இராமசந்திர விலாசம் பிரஸ், மதுரை 1965. 'சிறிய தொடரர்கும் லச்சணந்தி சீற்றமுள்ள தட்சணாமூர்த்தி தேசம்' (அக. 12000)

தேசமெல்லாம் தான் திரிந்து கண்டாராய்ந்து[8] என்றுள்ளது. எனவே, அகத்தியர் நன்னூலாசிரியர் மீது பற்றும், மதிப்பும் கொண்டது புலனாகும். அகத்தியர் பஞ்சகாவிய நிகண்டு 800 இல் சமணமுனிவரான குந்தகுந்தாச்சாரியாரின் பெயர் வருகின்றது. இவரது காலம் கி.பி. ஒன்று "வரத்தைக் குந்தகுந்தமென்றும் பேரு[9]" மேலும் இதின் அருவாதி, ஆசான் என்பனவான பெயர்கள் (பாடல் 582, பாடல் 908) வருகின்றன. இவை யாவும் சமணத்துடன் தொடர்புள்ளவையாகும். இது போன்றே சமணர்களின் நாட்டுப்புறப்பாடல்கள் உள்ளன.

> **"மசக்கையம்மா, மசக்கையடி - ஏலாலோ**
> **மாமரங்கள் காவலடி - ஏலாலோ"[9]**
>
> **"செக்குப் போல வந்ததோமா**
> **சுக்குப்போல ஆனாமே"[10]**

இது போன்றே சமணர்களின் கொல்லாமையைக் கூறும் ஒரு பழமொழி, 'சைனன் கைச்சீலைப் பேன்போல' என்பதாகும்.

**சமணசமய நெறிகளும், சித்த மருத்துவமும்**

"சீவன், அசீவன் இரண்டும் அழிவில்லாதவைகள் ஆன்மாக்கள் உள. அவைகள், பல"[11] என்பது சமணர்களின் கொள்கையாகும். மேலும் கன்மங்கள் பலனைத்தரும். இது பாவ கன்மம், திரவிய கன்மம் என இரண்டாகும். பாவ கன்மம் உயிரையும், திரவிய கன்மம் உடலையும் பற்றும்[12] உலகம் அணுக்களாலானது. உலகத் தோற்றத்துக்கு இதுவே மூல காரணமாகும். அணுக்களின் சேர்க்கையில் உண்டான எண்ணிக்கைகளின் காரணமாகவே வேறுபாடுகள் ஏற்படுகின்றன.

---

8. அகத்தியர் 12000 – 3ஆம் காண்டம் எஸ்.பி. இராமச்சந்திரன். பக்கம் 63, பாடல் 216, தாமரை நூலகம், சென்னை.
9. அகத்தியர் பஞ்ச காவிய நிகண்டு 800 – பாடல் 563, மகால், ஸ்டார் பிரிண்ட் அண்ட் பேக் 2000
10. சமண நாட்டுப்புறப் பாடல்கள்– பேரா அசோக்குமார். நினைப்பிரபா பதிப்பகம், (பக்கம் 94)
11. மேலது ——— பக்கம் 117 ———
12. மேலது – பக்கம் 114, 115 சேர்க்கையில் உண்டான எண்ணிக்கைகளின் காரணமாகவே வேறுபாடுகள் ஏற்படுகின்றன.

சித்தர்கள் இருவினைகள் பற்றிய கருத்துகளை ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

'மலமான கர்மத்தின் வகையைக் கேளு
வளர்ந்த நல்வினை, தீவினை இரண்டாம்'

'கொட்டுதே, குருவாய்த் தத்துவங்களாகி
கொடிய தீவினையும், நல்வினையுமாகி'

'பாழான பழிபாவம் தலை மேற்கொண்டு
பாழ்நரகில் வீழ்வதுவும் திண்ண மாமே'

'பண்ணமாம் மூவேழு சுற்றத்தாரும்
படுநரகில் விழுவது பான்மை யாமே'

சமணர்களின் தலையான கொள்கை உயிர்களைக் கொல்லாமையாகும்.

இக்கருத்தைச் சில சித்த மருத்துவநூல்கள் வலியுறுத்துகின்றன. உயிர்களைத் துன்புறுத்துதல், ஊனுக்காகக் கொல்லுதல் என்பனவற்றால் நோய்கள் தோன்றும். இதை 'அகத்தியர் கன்ம காண்டம் 300' என்ற நூலில் காணலாம். சான்றாகப் பாடல் 98 இல் 'நினைவு கெட்டு சீவசெந்துதனை அடித்தலாலே' பீசைம் என்ற நோயுண்டாகும். 'உலகத்தில் உயிர் வதை ஊனைத் தின்னலால் கிராணி நோய் தோன்றும் (பாடல் 139)' தாமென்ற உயிர்களைத் தான் கட்டித் தூக்கித் தாரணியில் போட்டறுத்த சண்டாளத்தால் ——— ஒமென்ற உயிர்களைத் தான், குடலைக்கீறி உறும்பாவம் கொண்டதால் உதித்ததாமே' என்று ஆனந்த வாயு உண்டாகும் காரணத்தைக் கூறுகின்றார். உயிர்களைக் கொல்லுவதைத் தடுக்காமல் இருப்பது கூட, நோய்கள் உண்டாகக் காரணமாகும். இதை 'விருதுடனே, பலவுயிரைக் கொல்லக் கண்டு, விலக்காதே பார்த்திருந்த வீறினாலே', கண்நோய்கள் ஏற்படும் எனப் பாடல் 178 இல் வருகின்றது.

---

13. அகத்தியர் தத்துவம் 300 – கு. இராமசாமி கோன், பக்கம் 55, பாடல் 203 ஸ்ரீ இராமச்சந்திர விலாசம் பிரஸ், 1965 – (2 ஆம் பதிப்பு).
14. யூகி வைத்திய சிந்தாமணி 800 இரா. தியாகராசன் – பக்கம் 46, பாடல் 115.
15. மேலது – பக்கம் 4, பாடல் 11.
16. மேலது – பக்கம் 5, பாடல் 12.

“கொல்லாமையைப் போன்றே, உணவளித்தலையும் பெரும் தொண்டாகச் சமணம் வலியுறுத்தும். பிறர் பசித்திருக்க, உண்ணலால் நோய்களுண்டாகும். பலநோய்கள் தீர, உணவு வழங்குதல் வேண்டும். இவ்வறத்தால் நோய்கள் நீங்கும். தலைநோய் தீர, ‘சுந்தரமாய், புருடர்க்கு அன்னதானம், (பாடல் 105) பித்த நோய் நீங்க’ அரிதானம் மரங்களுக்கு, அன்னதானம் (பாடல் 92) என்றும் வருகின்றது. தனித்து பிறருக்கு உணவிடாமல் உண்பது நோய்களை உண்டாக்கும். சுரநோய் வருவதற்கு பசித்திருப்போருக்கு ஈயாமல் உண்ட பாவம்’ (பாடல் 120) என்றும், குன்ம நோய் என்றகுடல்புண் தோன்ற, தன்மையில்லா பிறர் பசிக்க உண்ட பாவம்’ என்றும் வருகின்றது. (பாடல் 66, 67) எனவே, நோய்களுக்கான மாற்றுவழியாக அறம் கூறப்படுகின்றது. தீவினைகளால் உண்டான கன்மம் தீருவதற்குப் பொதுத்தொண்டு செய்ய வேண்டும். இதை ‘நாவாயாலே வந்த கன்மம் தீரவென்றால் நன்மரங்கள் தோட்பு, நடைசாலை வைத்தல் (பாடல் 56) ‘அளித்திடு, கன்னியருக்கு வஸ்திர தானம், அன்னதானம், இடுவாய் தினம் நூறு பேர்க்கு என்று, ஈளை நோய் தீரவும், ‘அன்னமிடு தன தானமுதல் கோதானங்கள்’ என்று குன்ம நோய் தீரவும்,

‘அறன் தேடல், உறவின் முறை, சுற்றத்தார் அகதி, பரதேசியருக்கு அன்ன மீதல் 156ஆம் பாடலில் கூறப்பட்டுள்ளது. பிறருக்கு இன்னல் தருவார்க்கு நோய் தீராது என்பதை யூகி வைத்திய மணியின் பாடல் 28 விளக்குகின்றது. ‘பஞ்சமா பாதகர், பிறரின் வசைக்காளானவர்கள் மருந்தை உண்டபின் பழிப்போர், சண்டை போடுவோர், பெண் வேட்கையர், நஞ்சு தந்து மெலிவுண்டாக்குவார் ஆகியோருக்குப் பிணிகள் தீராது. இவ்வாறு சமுதாயத்தின் கேடுகளைக் களைய அறமுரைத்தார்கள்.

**நிறைவுரை**

சமணசமயக் கொள்கைகளான உணவு வழங்கல், கொல்லாமை, பிறரைக்காத்தல், கல்விகற்றுத் தருதல் என்பன சித்த மருத்துவத்தில் இடம் பெற்றுள்ளன. இவற்றை மேலும் ஆய்வு செய்தால், சமண சமயத்துக்கும் சித்த மருத்துவத்திற்குமுள்ள உறவு புலப்படும்.

# குறவஞ்சி

இரா. சதாசிவம்
செந்தமிழ்ப் பதிப்பாசிரியர்
மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை–1.

குறவஞ்சி ஓர் இசைக்கூத்து இலக்கியம். குறவஞ்சி என்பதற்குக் குறப்பெண் என்பது பொருள். குறத்தியை மையமாக வைத்து சிற்றிலக்கிய வகையில் குறவஞ்சிக் கூத்து நாடகம் அமைகிறது. கி.பி. 17ஆம் நூற்றாண்டில் தோன்றிய சிற்றிலக்கிய வகைகளுள் குறவஞ்சி இலக்கியமும் ஒன்றாகும்.

தலைவியின்,

> ***"களவு அலர் ஆயினும், காமம் மெய்ப்படுப்பினும்,***
> ***அளவு மிகத்தோன்றினும், தலைப்பெய்து காணினும்,***
> ***கட்டினும் கழங்கினும் வெறி என இருவரும்***
> ***ஒட்டிய திறத்தான் செய்திக் கண்ணும்"* (தொல். களவியல் நூ 25. 1–4)**

எனத் தொல்காப்பியம் கூறும் குறிவகையினை அடியொற்றி இன்பியல் கூறுகளுடன் அன்பு நெறியை வலியுறுத்திக் குறவஞ்சி இலக்கியம் தோன்றியுள்ளது. பன்னிருபாட்டியல் "இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் முக்காலமும் திறப்பட உரைப்பது குறத்திப்பாட்டே" எனக் குறத்திப்பாட்டுக்கு இலக்கணம் கூறுகிறது. இவற்றின் விரிவே குறவஞ்சி இலக்கியம்.

குறவஞ்சி இலக்கியம் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் விரவி அமைந்த இன்பியல் நாடகம். இசை அமைப்பில் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் மூன்று உறுப்புக்கள் கொண்டு அமையும். உரைநடை விரவி வந்துள்ளது. குறவஞ்சி இலக்கியம் சிற்றிலக்கிய வகையைச் சார்ந்த நாடக அமைப்பினை உடையது.

தமிழ் நாடகங்களில் நாடகத்தின் தோற்றுவாயாகக் கதாநாயகன் வருகைக்கு முன்பு கட்டியம் கூறி நாடகத்தை அறிமுகம் செய்வது வழக்கம். அவ்வகையில் குறவஞ்சி நாடகத்திலும் கட்டியங்காரன் வருகின்றான். தலைவன் வருவதை அறிமுகம் செய்கின்றான். தலைவன் திருவீதி உலா வருகின்றான். கடவுள் பாட்டுடைத் தலைவனாக உள்ள குறவஞ்சி இலக்கியம் புராணச் செய்திகளை உணர்ச்சி ததும்ப எடுத்துரைக்கிறது. கற்பவர்களுக்குப் பக்திச்சுவையும் மெய்ப்பொருட்சுவையும் மேலோங்கச் செய்கிறது. பக்திச்சுவையும் மெய்ப்பொருட்சுவையும் கற்பவர்களுக்குச் சோர்வு அளிக்காமல் காமமும் காதலும் விரவி இன்பூட்டுகிறது.

தலைவன் வருகை ஊரவர்க்கு ஆரவாரத்தோடு கூடிய இன்பமளிக்கிறது. ஊர்திரண்டு கூடி மகிழ்கிறது. தலைவன் வரும்போது தலைவியின் பந்தாடல் கவிநயம் பெறுகிறது. தலைவியின் உறுப்புக்களெல்லாம் பந்தாடிமகிழ்கின்றன. கவிஞன் சொற்களில் தலைவியின் ஏற்றம் தோற்றம் பெறுகிறது. தலைவியும் தலைவனைக் கண்டு காதல் மயக்கமடைகிறாள், விரகதாபம் உற்று நிலவையும் காமனையும் பழிக்கின்றாள், தோழியைத் தலைவனிடம் தூது அனுப்புகின்றாள். குறத்தியின் வருகை, தலைவி குறத்தியிடம் மலைவளம் கேட்டல், குறத்தி மலைவளம் கூறல், தலைவரின் நாடு நகர் வளம் வினவுதல், குறத்தி அவற்றைக் கூறல், குறத்தியின் குறிவிசேடம் வினவுதல், குறத்தி குறி சொல்லல், குறி சொன்னவளுக்கு அணிகலன் கொடுத்தல், குறத்தியைக் குறவன் தேடிவருதலுடன் காட்சி முடிகிறது.

குறவஞ்சி இலக்கியத்துள் தலைசிறந்ததும் முதலில் தோன்றியதும் திரிகூடராசப்ப கவிராயர் எழுதிய குற்றாலக் குறவஞ்சியாகும். இந்நூல் கற்பவருக்கு இன்பம் தரும் கவிதைச் செல்வமாகும். ஒவ்வொரு அடியிலும் கவிராயர் எதுகை, மோனை,

சொற்பொருள் முரண், அணிநலம், கற்பனைநயம், உணர்ச்சி இன்பம் பெய்து படைத்திருப்பது கற்குந்தோறும் இன்பம் தருவதாகும். வசந்தவல்லியின் காமரசம் சொட்டும் அழகை வருணிக்கும் கவிஞன், "காமத்துட்டன் அரண்மனைக்குக் கட்டும் கதலி வாழைத்துடையினாள்" என்பான். இதுவே பிற்காலத்தில் "இந்திரன் தோட்டத்து முந்திரியே" எனக் கவிஞனால் வருணிக்கப்படுகிறது. அக்காலத்தில் புகழுடன் வாழ்ந்த சிற்றரசர் சின்னனைஞ்சாத்தேவன் "குற்றாலநாதர் கோவிலுக்குப் பணிகள் பல செய்த வரலாற்றை ஆசிரியர், "குற்றாலநாதர் வழித் தொண்டு செய் திடக்கச்சை கட்டிக் கொண்ட சீலன் சின்னனைஞ் சேந்திரன்" எனக் குறிப்பிடுகிறார். இவ்வாசிரியர் இலக்கியம், வரலாறு, மெய்ப்பொருள் சிறக்க நூலைப் படைத்துள்ளார். இவ்விலக்கியம் காலங்களை வென்று நிற்கும் வாழ்வு இலக்கியமாகும்.

இந்நூலைப் பின்பற்றி, சரபேந்திர பூபாலகுறவஞ்சி நாடகம், வஞ்சி நாடகம், கும்பேசர் குறவஞ்சி நாடகம், திருவாரூர்க் குறவஞ்சி நாடகம், அர்த்தநாரீசுவரக் குறவஞ்சி என நாடகங்கள் தோன்றின. சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம் தஞ்சையையாண்ட மன்னனைக் குறித்துப் பாடப்பட்ட நூலாகும். மற்றைய குறவஞ்சி நாடகங்கள் கடவுளரைக் குறித்துப் பாடப்பட்டவையாகும். புலவர்கள் அரசரையோ, கடவுளரையோ இவ்வகை இலக்கியத்தில் பாடுதல் கூடும் என்பது விளங்கும்.

இவ்விலக்கியம் ஆசிரியப்பா, வெண்பா, தரவுகொச்சகம், கலித்துறை, ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம் போன்ற பாவகைகளோடு சிந்து, கீர்த்தனை, கண்ணிகள் போன்ற இசைப்பாடல்களும் விரவி ஆக்கப்பட்டுள்ளன.

# திருப்பாவை காட்டும் கண்ணன்

முனைவர் மு. மீனா
விரிவுரையாளர், செந்தமிழ்க் கல்லூரி

**முன்னுரை**

நீ எதுவாக நினைக்கிறாயோ அதுவாகவே மாறுவாய் என்ற கீதையின் வாக்கிற்கு இலக்கணமாகத் திகழ்பவர் பாவை நாச்சியார், கோதை நாச்சியார், சூடிக் கொடுத்த சுடர்க் கொடி என்றெல்லாம் அழைக்கப்படுபவராகிய ஆண்டாள். இவர் திருமாலைப் பாடிப் பரவும் பன்னிரு ஆழ்வார்களுள் 12ஆம் ஆழ்வாராகக் கருதப்படுபவர். திருப்பாவை, நாச்சியார் திருமொழி ஆகிய இரு பிரபந்தங்களைப் படைத்து என்றென்றும் பக்தர்கள் நெஞ்சிலும், இறை அனுபவத்திலும் நிறைந்திருப்பவர்.

"மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான்
நாராயணனே நமக்கே பறை தருவான்
பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய்"

என்னும் பாசுரம் தொடங்கி 30 பாசுரங்களைக் கொண்டது திருப்பாவை என்னும் பிரபந்தம்.

திருப்பாவை ஒரு பாவனை இலக்கியமாகும். இது கண்ணனை அனுபவிப்பதற்குரிய ஓர் உபாயமாகத் திகழ்கிறது.

கலியுகத்தில் பாண்டிய நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில் பெரியாழ்வார் இறைவனுக்கு மலர்மாலை தொடுத்துத் தருவதற்காக அமைக்கப் பட்ட நந்தவனத்தில் துளசிமாடத்தின் கீழ் பெரியாழ்வாரால் கண்டெடுக்கப்பட்ட

குழந்தையே கோதை என்று பெயர் சூட்டப்பட்ட ஆண்டாள். இவர் சிறுவயது முதலே பரமனைப் பக்தியினாலும் நாயகி பாவத்தினாலும் பாமாலையைச் சுவைபட இசைத்து, தாமே நாயகியாக வேண்டும் என்னும் எண்ணத்தோடு, பெருமானுடைய பெருமைகளையே எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டும் துதித்துக் கொண்டும் வாழ்ந்து வந்தார்.

எனவே திருவில்லிப்புத்தூரைத் திருவாய்ப் பாடியாகவும், அங்குள்ள பெண்களைக் கோபியர்களாகவும், தன்னை அவர்களுள் ஒருத்தியாகவும், வடபெருங்கோயிலை நந்தகோபர் திருமாளிகையாகவும், உள்ளே உறைந்திருக்கும் இறைவனைக் கண்ணனாகவும் பாவனை செய்து ஆழ்ந்த பக்தியுணர்ச்சியோடு ஆண்டாள் பாடியதே திருப்பாவையாகும்.

பகவத்கீதையில் கண்ணன், 'மாதங்கள் அனைத்தினுள்ளும் மார்கழியாகின்றேன் நான்' என்று தேவர்களின் காலைப் பொழுதாக அமையும் மார்கழி மாதத்தின் சிறப்பை அருளிச் செய்தமையால் மார்கழியில் பாவை நோன்பு மேற்கொள்ளுதலை மையமாகக் கொண்டு திருப்பாவை இசைத்துள்ளார்.

இதில் முதல் ஐந்து பாடல்கள் பாவை நோன்பின் சிறப்பை எடுத்தியம்புகின்றன. அடுத்த பத்துப்பாடல்கள் உறங்குகின்ற தோழியரை எழுப்புவதாகவும், அதையடுத்து வரும் ஆறு பாடல்கள் கோயில் காப்போன், வாயிற்காவலன், நந்தகோபன், யசோதை, நப்பின்னை, கண்ணன், பலராமன் ஆகியோரை எழுப்புவதாகவும் அமைந்துள்ளன. 22–25 வரையிலான அடுத்த நான்கு பாடல்கள் கண்ணனின் அருட்பார்வையை வேண்டி நிற்பதாகவும், நிறைவாக வரும் ஐந்து பாடல்கள் கண்ணனிடம் வேண்டுவனவற்றைக் குறிப்பதாகவும் அமைந்துள்ளன.

திருப்பாவையின் மற்றோர் சிறப்பு யாதெனின், மதுரகவியாழ்வார் தவிர்த்த பிற பதின்மர் ஆழ்வார்களைத் துயில் உணர்த்துவதாக அமையப் பெற்றதாகும். அதுபோல பாவை நோன்பின் சிறப்பும் குறிப்பிடத் தகுந்ததாகும். இளம்பெண்கள் இளங்காலைப் பொழுதில் எழுந்து நீராடி, துறவியர்கட்கும் ஞானிகட்கும் ஐயமும் இல்லாதவர்கட்குப் பிச்சையும்

நல்கி, எவ்வித ஆரவாரமும் அலங்காரமும் இன்றி அனைவரும் உய்யும் வழியை ஆராய்வதற்கு இறைவனை வழிபடுவர். அதனை,

"வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி
செய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமாறென்றெண்ணி உகந்தேலோர் எம்பாவாய்"

என்று பாடியுள்ளார்.

இவ்வாறு பாவை நோன்பு நோற்றால்,

"தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ்செந்நெல் ஊடு கயல் உகள
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண் படுப்ப
தேங்காதே புக்கிருந்து சீர்த்தமுலை பற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்"

என்று நாடும் நாட்டு மக்களும் வளம் பெறுவதே நோன்பின் பயனாகச் சுட்டப்படுகின்றது. பிறருக்காகச் செய்யப்படும் தன்னலமற்ற எந்தச் செயலும் மேன்மையானது அல்லவா! அத்தகு பாவை நோன்பு குறித்த இலக்கியம், இறைவனாகிய கண்ணனை அனுபவித்தற்குரிய உபாயமாகத் திகழ்வது மற்றுமோர் சிறப்பாக அமைவது.

பாவை நோன்பை மையமாகக் கொண்ட திருப்பாவை பரம்பொருளின் அவதாரமாகிய கண்ணனைக் காட்டுகின்ற திறம் ஓர் ஆன்மீகத் தத்துவமும் உண்மையும் கலந்த ஒன்றாக அமைவதை வெளிக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகத் திகழ்கின்றது. இந்நோக்கத்தை நிலைநிறுத்தும் வகையில் இக்கட்டுரை, கண்ணன் அறிமுகம் , கண்ணனின் திருதோற்றப் பொலிவு, கண்ணனின் சிறப்பு,

கண்ணனின் பிற அவதாரச் செய்தி, புகழ் நாமங்கள், கண்ணனின் இயல்புகள், ஆன்மிகத் தத்துவமும் உண்மையும் ஆகிய உட்பிரிவுகளைக் கொண்டமைகின்றது.

**கண்ணன் - அறிமுகம்**

ஒரு நபரை அடையாளம் காட்டுதற்கு உபாயமாக அமைபவர்கள் பெற்றோரே ஆவர். அதுபோல கண்ணனை நாச்சியார் முதல் பாடலில் *பெற்றோர் வாயிலாக அறிமுகம் செய்கிறார்.*

'கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்'

என்று கண்ணனைப் பகையாரிடமிருந்து காப்பதற்காக எப்பொழுதும் கூரிய வேலுடனும் எதற்கும் துணிந்தவனாகவும் திகழ்கின்ற ஆயர்பாடியின் சிற்றரசனாம் நந்தகோபனுடைய மைந்தன் என்று குறிப்பிடுகிறார். தந்தைக்கு அடங்கிய குமரனாகத் திகழும் கண்ணன், தாயாகிய யசோதையிடத்து வீரத்தைக் காட்டும் இளஞ்சிங்கமாக *அமைந்துள்ளதையும் கண்ணனின் அழகையும் குறும்பையும் கண்டு* மகிழ்கின்ற கண்களையுடையவள் யசோதை என்பதையும் குறிப்பதற்காக ஏரார்ந்த கண்ணி என்றும் யசோதை குறிக்கப்பெறுகிறாள்.

**கண்ணனின் திரு**

இப் பெற்றோரின் குழந்தையாகிய கண்ணன் எத்தகு தோற்றம் உடையவன் என்பதை அடுத்த அடியில் விளம்புகிறார்.

"கார்மேனிச் செங்கண் கதிர் மதியம் போல் முகத்தான்"

என்று முரண்சுவைபட, கண்ணனின் இயல்பு வெளிப்பட ஒரே அடியில் பாடப்பெற்றுள்ளான். கரிய மேனியை உடையவன். கறுப்பு என்பதே அழகு அல்லவா! அனைவராலும் விரும்பப்படும் வண்ணம் அல்லவா!

*பின்னாளில் கண்ணதாசன் அழகுற ஒரு திரையிசைப் பாடலில்* குறிப்பிட்டுள்ளார்.

"கண்ணா கறுமை நிறக்கண்ணா
உன்னைக் காணாத கண் இல்லையே
உன்னை மறுப்பார் இல்லை
கண்டு வெறுப்பார் இல்லை"

என்று எளிய சொற்களில் உணர்ச்சித் ததும்ப பாடுவார். இவ்வாறு அனைவராலும் விரும்பப்படும் வண்ணம் உடையவர்.

'கறுப்பா' என்று திகைத்தால் அவருள் செம்மையும் உண்டு என்பதைச் செங்கண் என்றுரைக்கிறார். மேலும் ஒளியும் குளிர்ச்சியும் நிறைந்த முகத்தை உடையவர் என்று கதிர்மதியம் போல் முகத்தான் என்று வருணிக்கிறார். இவையனைத்தும் ஒருங்கே ஒளிரப் பெற்றமையால் அனைவரின் உள்ளத்திலும் உறைந்திருப்பவராகக் கண்ணனின் திரு அமைந்துள்ளது.

ஆஹா! அழகுமிக்க உருவம் யார் அது? என்ற வியப்பிற்கு அடுத்த பாடலில் விடையிறுக்கிறார்.

'பாற்கடலுள் பயத்துயின்ற பரமன்' என்றும்
'ஓங்கி உலகளந்த உத்தமன்' என்றும்
'ஊழி முதல்வன்' என்றும் விளக்குகிறார்.

**தோற்றப்பொலிவு**

கண்ணனின் தோற்றப் பொலிவினைக் கறுத்த மேனியன், பாழியந்தோளுடையவன், வலதுகையில் சக்கரத்தையும் இடதுகையில் வலம்புரிச் சங்கையும் சார்ங்கம் என்னும் வில்லினையும் உடையவனாகவும் திகழ்பவன் என்று,

'ஆழிமழைக் கண்ணா.....!' என்று தொடங்கும் பாசுரத்தில் குறிப்பிடுகிறார்.

**கண்ணனின் சிறப்பு**

கண்ணன் மாயச் செயல்கள் புரிபவன், நிலைபெற்ற வடமதுரையின் தலைவன். தூய்மையும் பெருமையும் கொண்ட

நீரையுடைய யமுனை நதித்துறைக்கு உரியவன், ஆயர்குல விளக்கு என்று வருணிப்பவர், மகுடமாக "தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரன்" என்று குறிப்பிடுகின்றார். அமுதக்கலசம், நஞ்சுக்குடம், பாற்குடம் ஆகியவற்றுள் உள்ளிருக்கும் பொருளால், அதை நிறைத்திருக்கும் பாண்டம் சிறப்புறுதல் போல, வயிற்றில் கண்ணன் உதித்ததால் மேன்மையடைகின்றாள் தேவகி. அதனை இவ்வடியில் சுட்டுகின்றார். இத்தகைய கண்ணனை வழிபட்டால் செய்த பாவங்கள் அனைத்தும் தீயினில் தூசாகும் திறமும் சுட்டப்பட்டுள்ளது. மாயன், மைந்தன், துறவன், அணிவிளக்கு என்று கண்ணனின் சிறப்பும் உயர்வும் குறிப்பிட்டதற்குப் பின், ஆண்டாள் கண்ணனின் லீலைகளை அவரின் ஆற்றலாக அடுத்தடுத்த பாசுரங்களில் குறிப்பிடுகிறார்.

**கண்ணனின் லீலைகள்**

*கண்ணனைப் பெற்ற தேவகியின் உடன் பிறந்தவனாகிய கம்சன், தன்னைக் கொல்லப் பிறந்த கண்ணன் ஆயப்பாடியில் வளர்ந்து வருவதை* அறிகின்றான். பல்வேறு அரக்கர்களை அனுப்பி, கண்ணனைக் கொல்ல முனைகின்றான். அப்பொழுதெல்லாம் விளையாட்டுப் போக்கிலேயே கண்ணன் அவர்களைக் கொன்று ஒழிக்கின்றான். கண்ணனின் இத்தகுலீலைகளை ஆண்டாள் அழகுற எடுத்தியம்புகிறாள்.

i) **பேய்முலை நஞ்சுண்டவன்** பூதனை என்னும் அரக்கி, அழகிய பெண்வடிவம் கொண்டு, திருவாய்ப்பாடிக்கு வந்து கண்ணனைக் கையில் எடுத்து நஞ்சு நிறைந்த தன் பாலைக் கொடுத்து கொல்ல முனைகின்றாள். கண்ணன் பாலுண்ணுகின்ற பாவனையில் அவளுயிரையும் உறிஞ்சிக் கொன்றான்.

ii) சகடாசுரனைக் கொன்றதை, கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சியவன் என்று விளம்புகிறார்.

பிறிதொரு நாள் மரத்தடியில் தொட்டிலில் தூங்கிக் கொண்டிருக்கும் கண்ணனை வண்டி (சகடம்) வடிவில் வந்து கொல்ல முனைகின்றான் ஓர் அசுரன். அப்பொழுது காலை உதறி அழுவதுபோல், தன் சிறிய திருவடிகளை மேலே தூக்கி உதைக்கிறார். அவ்வளவில்

அவ்வண்டியானது திருப்பப்பட்டு, கீழே விழுந்து அசுரன் நசுங்கி அழியுமாறு செய்தான்.

### iii) மாவாய் பிளந்தான் - கேசவன்

கேசி என்னும் அரக்கன், குதிரை வடிவத்தோடு அனைவரும் அஞ்சி நடுங்கும் வகையில் கனைத்துக் கொண்டு கண்ணன் மேல்பாயும் பொழுது குதிரையின் வாயில் கையினைக் கொடுத்துத் தாக்கிப் பற்களை உதிர்த்து அதன் உதட்டைப் பிளந்து, அதன் உடலையும் இரு பிரிவாகப் பிளந்து கொன்றான்.

### iv) மல்லரை மாட்டியவன்

கண்ணனையும் பலராமனையும் விழாவிற்கு அழைப்பது போல் கம்சன் தன் அரண்மனைக்கு அழைக்கிறான். மல்யுத்தத்தில் கலந்துகொள்ளச் செய்து அழிக்கத் திட்டம் தீட்டுகின்றான். அதனை உணர்ந்த கண்ணன் போட்டிக்கு அழைத்த மல்லர்களை அழிக்கிறான்.

### v) புள்ளின் வாய் கீண்டான்

பகன் என்னும் அசுரன், கொக்கின் வடிவு கொண்டு யமுனை நதிக்கரையில் இருந்த கண்ணனை விழுங்கினான். அவனது நெஞ்சத்தில் கண்ணன் நெருப்புப்போல் எரிக்கவே, பொறுக்க மாட்டாமல் கண்ணனை வெளியே உமிழ்ந்து மூக்கால் கொத்த முனைந்தான். கண்ணனோ கொக்கின் வாய் அலகுகளை இரண்டாகக் கிழித்து கொன்றான்.

### vi) வல்லானைக் கொன்றான்

கண்ணனைக் கொல்வதற்கு முனைந்த கம்சனின் குவலயாபீடம் என்னும் வலிய யானையைக் கண்ணன் கொன்றான்.

### vii) மாற்றாரை மாற்றழிக்க வல்லான்

எதிரியாகிய கம்சன், கண்ணனை அழிக்க வேண்டும் என்று பல்வேறு செயல்களைச் செய்யும் போதெல்லாம் அவர்களின் எண்ணத்தை அழித்தவன். இதனை,

1. தீங்கு நினைத்த கருத்தைப் பிழைப்பித்தவன்

2. கூடாரை வெல்லும் சீர்கோவிந்தன் என்றும் குறிப்பிடுகின்றார்.

### vii) கன்று குணிலா எறிந்தான்

கன்று வடிவில் வந்து கொல்ல முனைந்த அசுரர்களைக் கழியால் எறிந்து கொன்றான்.

## கண்ணனின் பிற அவதார செய்தி

### 1. ஓங்கி உலகளந்த உத்தமன்

மாவலி என்னும் அசுரன், தன் வல்லமையால் இந்திரன் முதலான தேவர்களைத் துன்புறுத்த, தேவர்கள் திருமாலிடம் சரணடைகின்றனர். அப்பொழுது திருமால் வாமன அவதாரம் எடுத்து, மாவலியிடம் சென்று, தன் காலடியில் மூன்றடி மண் வேண்டுகிறார். அரசனும் மூவடி மண்ணைத் தாரை வார்த்துக் கொடுக்கிறான். உடனே வாமனவடிவில் இருந்த மூர்த்தி திரிவிக்கிரமனாய் உயர்ந்து ஓரடியால் மண்ணை அளந்து, இரண்டாம் அடியால் ஆகாயத்தை ஊடறுத்து விண்ணை அளந்து, மூன்றாம் அடியால் மன்னனின் தலையில் கால்வைத்து ஆணவம் அடக்கினான். அந்த இறைமையை "ஓங்கி உலகளந்த உத்தமன்" என்றும் "அம்பரம் ஊடறுத்து ஓங்கி உலகளந்த உம்பர் கோமான்" என்றும் ஆண்டாள் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

### 2. இராமாவதாரச் செயல்

தன் இன்துணையாம் சீதையைக் கவர்ந்து சென்ற தென்னிலங்கை மன்னன் இராவணனையும் அவன் தம்பிமார்களையும் அழித்த செயலை,

'சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக்கினியான்' என்றும்

'பண்டொருநாள் கூற்றத்தின் வாய் வீழ்ந்த கும்பகர்ணன்' என்றும் பாடிப் பரவுகிறது.

**புகழ்நாமங்கள்**

மாமாயன் கோவிந்தன், மாதவன், வைகுந்தன், தாமோதரன், நாராயணன், மால், மணிவண்ணன், ஆலிலையான் என்றெல்லாம் பற்பல புகழ்நாமங்களைக் கொண்டவன் கண்ணன் என்பது திருப்பாவை முழுவதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கண்ணனின் இயல்புகள்**

- ★ முப்பத்து மூவர் அமரர்க்கும் முன் சென்று கப்பம் தவிர்க்கும் கலியே செப்பம் உடையாய் திறலுடையாய்
- ★ செற்றார்க்கு வெப்பம் கொடுக்கும் விமலா அறிவுறாய்
- ★ ஊற்றமுடையாய்
- ★ பெரியாய்
- ★ உலகினில் தோற்றமாய் நின்ற சுடர்
- ★ ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில் ஒருத்தி மகனாய் ஒளித்து வளர்த்தான்
- ★ தீங்கு நினைத்த கருத்தைப் பிழைப்பித்தான் என்றெல்லாம் கண்ணனின் குணநலன், இயல்பு, பெருமை ஆகியவற்றை விளக்கும் திருப்பாவை, கண்ணனின் பற்றற்ற நிலையையும் போற்றிப் புகழ்கின்றது.

"கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப்பூப்போல
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல்
விழியாவே" என்ற அடிகளாலும்

திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல் என்ற தொடராலும் இறைவனின் பற்றற்ற நிலையைக் காட்டுகிறது. கண்ணனின் கண்கள் அடியவர்களின் குற்றங்களை நினைத்துப் பாதி மூடியும், அவர்களுடைய கூக்குரலைக் கேட்டுப் பாதி திறந்தும் இருத்தலின் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தன் கோயில் நாடி வரும் பக்தர்களின் இயல்பை ஆராய்ந்து அருள்செய்யும் திறத்தவன் என்றெல்லாம்

திருப்பாவை சுட்டி நிற்கின்றது.

பிறப்பிலிருந்து திரு ஆற்றல், லீலைகள், அவதாரச் செய்திகள், இயல்புகள், அருள் தன்மை, பற்றற்ற நிலை அனைத்தையும் வெளிக்காட்டி இறுதியில்,

"குறைவொன்றும் இல்லாக் கோவிந்தா"

என்று பரவசத்தில் ஆழ்த்துகின்றது திருப்பாவை.

**ஆன்மீகத் தத்துவமும், உண்மையும்**

தோற்றத்தில் இல்லாத நீராவியில் இருந்து, தோற்றத்தில் உள்ள நீரும் உறைபனியும் உண்டாவது போன்று தோற்றத்தில் இல்லாத மெய்ப்பொருளில் இருந்து உலகம் யாவும் உரு எடுத்திருக்கிறது. இறைவனால் படைக்கப்பட்ட மனிதன் படிப்படியாக உயர்ந்து உன்னத நிலைக்குப் போவதே வாழ்க்கையின் குறிக்கோள் ஆகும்.

குறைபாடு இல்லாத மனிதர்களைக் காண்பது அரிது. அம்மனிதர்களுள் கடவுளின் முழு மகிமைகளோடு மண்ணுலகில் பிறக்கின்றவர்கள் அவதார புருஷர்கள் என்றழைக்கப்படுவர். கடவுளை ஊனக் கண்கொண்டு காண்பது அரிது; சான்றோர்கள் ஞானக் கண்கொண்டு இறைவனைக் காண்பர். ஆனால் அவதாரப் புருஷர்களைக் கண்ணால் காண இயலும். இவர்கள் பிறந்தது முதற்கொண்டு தெய்வீக உணர்வு அவர்களிடத்துத் திகழ்ந்து கொண்டிருக்கும். மறந்தும் அவர்கள் அறநெறி பிறழ்வது இல்லை. அவர்கள் விளையாட்டாகச் செய்கின்ற செயல்களிலும் சீரிய தத்துவங்கள் செறிந்திருக்கும். பண்டிதர், பாமரர், கற்றவர், மற்றவர், ஆடவர், மகளிர், பெரியவர், சிறியவர், முதியவர், இளைஞர் ஆகிய அனைவர்க்கும் விளங்கும் படி நல்வாழ்வை வாழ்ந்து காட்டுவர். நல்லாரைக் காப்பதும் கொடியவர்களைக் கரப்பதும் அவர்களுடைய சீரிய செயல்களாகும். அதிசயச் செயல்களை எளிதில் செய்து முடிப்பர். நேரான வழியில் முயன்றால் மக்கள் எல்லோரும் மேல் நிலைக்கு வரலாம் என்பதை எடுத்துக்காட்டுவார்கள்.

கடவுளிடத்து இருந்து வந்த மனிதன், தான் எங்கிருந்து வந்தோம். எதற்கு வந்தோம் என்பதை மறந்து விடுகிறான். ஆனால் அவதார புருஷர்களோ தாங்கள் எங்கிருந்து வந்திருக்கிறார்கள் என்பதையும் எதற்காக வந்திருக்கிறார்கள் என்பதையும் உணர்ந்து செயல்படுவர். அத்தகு அவதார புருஷர்களுள் இறைமை, ஆற்றல், புகழ், திரு, பேரறிவு, பற்றற்ற நிலை ஆகிய ஆறு தெய்வீக இயல்புகளும் சிறப்புற்று மறைந்து நிற்கும்.

ஆனால் ஸ்ரீ கிருஷ்ணரிடத்து, கண்ணனிடத்து இவை ஆறும் பரிபூரணமாக மிளிர்ந்து நிற்கின்றன என்பதைத் திருப்பாவை வெளிக்காட்டி நிற்கின்றது. இதன் காரணமாக அவதாரப் புருஷர்களுள் கண்ணன் அவதாரம் என்பது மட்டுமே பூரண அவதாரம் என்பது பெறப்படுகின்றது.

அதனை,

அன்றிவ்வுலகம் அளந்தாய் அடிபோற்றி
சென்றங்கு தென்னிலங்கைச் செற்றாய் திறல் போற்றி,
பொன்றச் சகடம் உதைத்தாய் புகழ்போற்றி
கன்று குணிலா வெறிந்தாய் கழல் போற்றி,
குன்று குடையாய் யெடுத்தாய் குணம் போற்றி
வென்று பகை கெடுக்கும் நின்கையில் வேல் போற்றி

என்னும் பாசுரம் சுருக்கி உரைத்துள்ளது. பூரண அவதாரம் கண்ணன் என்பதை வலியுறுத்தவே நிறைவாக 28ம் பாகத்தில் திருப்பாவை "குறையொன்றும் இல்லாத கோவிந்தா" என்று குறிப்பிட்டுள்ளது.

பூரண அவதாரமாகத் திகழ்பவன் கண்ணன் என்பதே திருப்பாவை காட்டும் கண்ணனாம்.

# சீவான்மா

மு. வேங்கடசாமி நாட்டார்

*"பிரணவப் பொருளாம் பெருந்தகை யைங்கரன்*
*சரணவற் புதமலர் தலைக்கணி வாமே".*

சங்கங்களும், பிரசங்கங்களும், நம் செந்தமிழ் போன்ற பத்திரிகைகளும் அவாவுடைய மாணாக்கர்கட்குப் பெரும் பயனளிப்பதோடு, கற்றுவல்ல பண்டிதராயினார்க்குச் சிறிது பயனளிப்பனவுமாம். இவ் வியாசமும் ஒரே விஷயத்தைப் பற்றி நூல்களிற் பலவிடங்களிற் கூறப்பட்டுப் பரந்துகிடந்தவற்றை யொருவழித் தொகுத்து மாணாக்கர்க்கே பயன்படுமாறு வசனரூபமா யெழுதப் படுதலாற் பண்டிதசிரோமணிகளா யுள்ளவர்கள் தமக்காவதன்றெனச் சிறிதுங் குறைகூறார்களென்னும் நம்பிக்கை பெரிதுமுடையேன்.

அநாதி மூத்த சித்துருவாகிய சிவபெருமானாலருளிச் செய்யப்பட்ட காமிகம் முதலிய சிவாகமங்களிருபத்தெட்டும் ஞானபாதம், யோகபாதம், கிரியாபாதம், சரியாபாதம் எனத் தனித்தனி நான்கு பாதங்களுடையனவாயிருக்கும். அவற்றுள், ஞானபாதத்திற் பரமசிவனுடைய சொரூபமும், மூவகையான்மாக்களின் சொரூபமும், ஆணவம் முதலிய பாசங்களின் சொரூபமும், தத்துவங்களின் றோற்றமும் பிறவுங் கூறப்படும். அவற்றுள், சீவான்மாவைப் பற்றி முற்கூறிய ஆகமங்களாகிற சைவசித்தாந்த சாஸ்திரங்களின் வாயிலாகவும், அநுபவமுள்ள ஆன்றோர்வாயிலாகவும் யானுணர்ந்த சிலவற்றுள்ளும் மிகச் சிலவற்றையே யீண்டெழுதலானேன்.

ஆன்மாக்கள் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என மூவகைப்படுவர். விஞ்ஞானகலர், ஆணவமல மொன்றேயுடையவர்கள். பிரளயாகலர் ஆணவம், கன்மம் ஆகிய இரண்டு மலமுடையவர்கள். சகலர் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலமுடையவர்கள். பின்னெழுதப்படுவன பெரிதுஞ் சகலருக்கேயுரியவை.

---

இவ்வியாசம், மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பத்தாம் வருஷோற்சவ காலத்தில் (26–6–1911–ல்) படிக்கப்பெற்றது.

**சகலருக்குத் தூலதேகமாவது :**

அண்டசம், உற்பிச்சம், சுவேதசம், சராயுசம் என்னும் நால்வகை யோனிகளிலும் பிறப்பதாய்த் தேவர், மானுடர், விலங்கு, பறவை, நீர்வாழ்வன, ஊர்வன, தாவரம் என்னும் எழுவகைத் தோற்றத்தையுடைய எண்பத்து நான்கிலக்ஷ யோனிபேதமாயுள்ளது. இவ்வுடல்களையுடைய வுயிர்கள் விஷயங்களையறியும் பேதத்தினால் அறுவகைப்படும். புல், மரம் முதலியவை பரிசம் ஒன்றையே உணரும் ஓரறிவுயிர்கள். நந்து, முரள் முதலியவை அதனொடு சுவையையுணரும் ஈரறிவுயிர்கள். சிதல், எறும்பு முதலியவை அவற்றோடு கந்தத்தையுணரும் மூவறிவுயிர்கள். நண்டு, தும்பி முதலியவை அவற்றொடுருவத்தையும், அதனொடு சமவாயமாயுள்ள வடிவத்தையுமுணரும் நாலறிவுயிர்கள். மா, மாக்கள் முதலியவை அவற்றொடோசையை யுணரும் ஐயறிவுயிர்கள். மக்களெனப்படுவார் ஐம்பொறி யுணர்வேயன்றி மனவுணர்வொன்றுமுடையர். இவற்றின் விவரங்கள் "**தொல்காப்பிய மரபியற்கண்ணே ஒன்றறிவதுவே**" என்பது முதலிய சூத்திரங்களாலும், அவற்றினுரையானு முணரத்தக்கவை.

இனி, மெய்கண்டதேவரால் மொழிபெயர்த்தருளிச் செய்யப்பட்ட சிவஞான போதத்தின் கண் "உளதில தென்றலி னெனதுடலென்றலி, னைம்புலனொடுக்க மறிதலிற் கண்படி, லுண்டிவினை யின் மையி னுணர்த்த வுணர்தலின், மாயா வியந்திர தனுவினு ளான்மா" எனச் சீவான்மாவினுண்மையும், "அந்தக் கரண மவற்றினொன் றன்றவை, சந்தித்த தான் மாச் சகலமலத் துணரா, தமைச்சர சேய்ப்ப நின் றஞ்சவத் தைத்தே", என அதனிலக்கணமுங் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றை யொருவாறு விளக்குதும்.

உடம்போ பல்வகைக் கருவிகளாற் கட்டுண்டியல்வ தொருபாவை. உடற்கருவிகள் பலவற்றையுந் தனித்தனியே பேதித்து ஆன்மா இதுவன்று, இதுவன்று என்று நீக்கிச் சோதனைசெய்து போதருங்கால் முடிவிற் சோதித்து நீக்கப்படுங்கருவி யாதுமின்றாய்ச் சூனியந் தலைப்படக்

காண்கின்றோம். ஆதலாற், சில ருண்டெனக் கூறும் ஆன்மா உட்பொருளாகமாட்டாது; சூனியமேயாம் என்று சூனியான்மவாதிகள் கூறுவர். உடல், பொறி முதலிய கருவிகளையெல்லாஞ் சோதனைசெய்து ஆன்மாவன்றெனை ஒரோவொன்றாகக் கழித்து நிற்பதாகிய அறிவு ஒன்றிருத்தலினால் அவர் சூனியமென்று கூறியது பொருந்தாது.

இனி, உடம்பின் கண்ணன்றி அறிவு நிகழக் காணாமையானும், நான் மெலிந்தேன் பருத்தேன் கரியேன் என உடம்பினையே நான் என்று வழங்கக்காண்டலானும் தேகமே ஆன்மாவெனத் தேகான்மவாதிகள் கூறுவர். அங்ஙனம் உடம்பின் குணவிசேடங்களை உப சாரத்தா லான்மாவுக்கேற்றி வழங்கினும் யானுடம்பு என வழங்காது என் பொருள் முதலியபோல என்னுடம்பெனப் பேதமுற வழங்குதலானும், சிறுபான்மை என்னுயிரென்பது ஆகுபெயராய்ப் பிறிது பொருட்குச் செல்லுதலானும், பிணக்கிடையில் தேகமிருப்பினும் அறிவு நிகழக்காணாமையால் உடம்பு சடமும் ஆன்மாச் சித்து மாகலானும், இவ் வுடம்பிற்குவேறாய் ஆன்மா உண்டென்பது பெறப்படுதலால், அதனையுணராது தேகமே ஆன்மாவென்னுமவர் கூற்றுப் போலி.

இன்னும் பிருதிவி, அப்பு, தேயு, வாயு என்னும் நான்கு பூதங்களும் நித்தியமென்றும், அவற்றுள் வாயு சலன குணத்தையுடையதாகையால் மற்றுள் பூதங்கட்கு அதனோடு கலப்புண்டாகுதலின் இச் சரீ ராதிகள் தோன்றுமென்றும், பாக்கு வெற்றிலை சுண்ணாம்பு மூன்றுங் கூடியவளவில் முன்பில்லாத சிவப்புத் தோன்றுதல்போலப் பூதசையோகத்தினால் முன்பில்லாத மனமுந் தோன்றுமென்றும், அறியுந்தன்மை மூளையினதேயாகலின் சரீரத்திற்கு வேறாயொரு ஆன்மா இல்லையென்றும், பிணமான சரீரத்தில் வாயுநீங்குதலால் அக்கினி அவியும்; அப்பொழுது அறிவுங்கெடுமென்றும் பலர் பலவாறு கூறுவர். பூதம் நான்குஞ் சடமாகலின் அவற்றின் கூட்டரவிற் சேதனம் புதுவதாகத் தோன்றுமென்ற லியையாது. பாக்கு வெற்றிலை சுண்ணாம்புகளின் கூட்டத்திற்றோன்றிய செவ்வண்ணம் சடப்பொருட்குணமேயன்றிச் சிற்குணமன்று. அன்றியும் பாக்கின் கண்ணினிது தோன்றாதடங்கி நிற்குஞ் செவ்வண்ணம் விளங்கித் தோன்றியதேயன்றிப் புதிதாகச்

செவ்வண்ணந் தோன்றிற்றில்லை. சரீரத்தின்கண் ஒரு பகுதியாய்ச் சடமாயுள்ள மூளைக்கு அறியுந்தன்மை யுண்டென்பதும், பிணமாமவசத்து வாயு நீங்குதலால் அறிவுகெடுமென்பதும் பொருந்தா, என்னை? உறக்கத்தின் கண் சரீரம், மூளை, வாயு என்பன வெல்லாமிருக்கவும், மூளைக்கும் மற்ற நாடிகட்குமுள்ள சம்பந்தம் நீங்காதாகவும், சூடு குளிர்ச்சி முதலியவைகட்குக் குறைவின்றாகவும் அக் காலத்திலறிவின்றாகலால் என்பது. ஆன்மா சரீரத்தின் வேறாகவிருத்தலினாற்றான் பூதாவேசங்களிலும் மற்றுஞ் சில விடங்களிலும் சரீரத்தை முற்றும் மறக்க நேருகின்றது. யோகிகள் சமாதிகாலத்திற் சரீரத்தை மறந்து சீதோஷ்ணங்களை யறியாதிருக்கின்றார்கள். தாம் உறங்குங்காலத்தில் தம்முடைய கைகால் முதலிய அவயங்கள் எவ்வமைப்புடனிருந்தன வென்று அறிந்து சொல்பவர் ஒருவருமில்லை.

இனி, இந்திரியான்மவாதிகள், செவி முதலிய பொறிகளே சத்தம் முதலிய விஷயங்களை யறிவனவாதலால் அவையே ஆன்மாவாகுமென்று கூறுவர். இந்திரியங்களுள் ஒன்றறிந்த விஷயத்தை மற்றொன் றறியமாட்டாமையானும், தனித்தனி விஷயங்களையறிவதன்றி எல்லா விந்திரியங்களும் ஒருங்கே யறிவதின்மையானும், விஷயங்களை யுணருந்தம்மைத் தாமேயுணரமாட்டாமையானும், ஓரிடத்திற் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறிந்த விஷயாநுபவங்களை மற்றொரிடத்திலிருந்து நினைந்து அவ்வண்ணமே நுகர்ச்சி யுறுகின்றமையானும் அவர் கூறியது பொருந்தாது. அவ்விந்திரியங்களைக் கொண்டறியவல்ல மனமாகிய கருவியையுடைய ஆன்மா வேறுண்டென்பதே தேற்றம்.

இனிப், புரியட்டகமாகிய சூக்கு வுடம்பே ஆன்மா வென்பாரும், பிராணவாயுவே ஆன்மா வென்பாரும், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரணமே ஆன்மாவென்பாரும், அனைத்துங்கூடிய சமுதாயமே ஆன்மாவென்பாரும், பிரமமே ஆன்மாவென்பாருமுளர். இவற்றுட் சில மேற்கூறியவைகளானே மறுக்கப்பட்டமையானும், இவற்றையெல்லாம் மறுத்துச் சித்தாந்தமோதுங்கால் மாணாக்கர்க்கு அறிவு தடுமாறுமாகலானும் இவற்றை நிறுத்தி மேற்செல்லுதும்.

இதுகாறுங் கூறிய சூனியம் முதலிய வெல்லாவற்றிற்கும் வேறாயுளதென்று பாரிசேட வளவையாற் பெறப்பட்ட ஆன்மாவானது உருவப்பொருளென்றும், அசித்தென்றும், சித்தசித்தென்றும், சித்தேயென்றும், அணுவென்றும், உடலினிஏகதேசியென்றும், உடல் முழுதும் வியாபியென்றும், எங்குந்தான் வியாபியென்றும், சுத்தசித்தாயிருந்தே பின்மாயாகாரியத்தால் மறைக்கப்பட்ட –தென்றும் பலர் பலவாறு கூறுவர். அவையெல்லாம் பொருந்தாவென்பதை முறையே விளக்குதும்.

உயிர் உருவப் பொருளாயின்: காட்சிப் புலனாதலும் பரிணமித்தழிவெய்தலும் வேண்டும்; அவ்வாறின்மையால் அஃது உருவப்பொருளன்று. சூக்குமவுருவாயின் அது தூலவுருவைத் தோற்றுவிக்குஞ் சடமாதல் வேண்டும்; அவ்வாறின்மையா லுயிர் சூக்குமவுருவன்று. அருவுருவென்னில் மறுதலைப்பட்ட விரண்டுதன்மையொரு பொருட்க ணொருங்கு நிகழ்தல் கூடாமையான் உயிர் அருவுருவன்று, ஆகாயம் போலருவென்னின்; அஃது உடம்பிற்குப் பல தொழில்களையும் பல விகாரங்களையுந் தரவற்றன்று; ஆதலா லுயிர் அருவன்று. உயிர் அசித்தே; அது பின் மனத்தோடுங்கூடிச் சித்தாயறியுமென்னில்; சடப்பொருள் சித்தாதலும் சித்துப் பொருள் சடமாதலு மின்மையாலது பொருந்தாது. சித்தசித்தென்னில் மாறுபட்ட விரண்டுதன்மை யொருங்கு நில்லாமையாலது பொருந்தாது. உயிர் சித்தே யென்னில் அசித்தாகிய கருவியை யன்றியறிதல் செல்லாமையால் அது பொருந்தாது. உயிரினை அணுவென்னில் ஒரு துவாரத்தா லோடிப்போவதன்றி, உடம்பிற் கட்டுண்டற்கும் பாரந்தாங்கற்கு மொவ்வாதாகையாலது பொருந்தாது. உயிரினை உடம்பினிஏகதேசி யென்னில் உரு என்றார்க்கோதிய குற்றமெய்து மாகலான் அது பொருந்தாது. உடல் முழுதும் வியாபியென்னில் உடம்பளவிற்குத் தக்க அறிவாதலின்மையாலும், உறக்கமுறுதலாலும், ஐம்பொறியினு மொருங்கே யறிவு நிகழாமை யானும் அது பொருந்தாது. உயிரினை முதல்போலெங்கும் வியாபியென்னில் அவத்தைகளும் போக்குவரவுகளு முறுதலானும், எல்லாவற்றையு மொருங்கே யறியாமையானும், உடம்பிற் கட்டுண்டு நிற்றலானுமது பொருந்தாது. வியாபகமாயிருந்த வுயிரை மாயாகாரியமான தநு, கரணம் முதலியவை பந்தித்து நிற்றலில்

அறிவுதடையுற்று ஏகதேசப்பட்ட தெனில் அறிவு விளங்குதற்கேதுவாய மாயாகாரியம் அறிவைத் தடைசெய்தல் கூடாமையானும், முன் சுத்தமாயிருந்தவுயிரை அது பந்தித்ததென்னில் வீடுபெற்றவழியும் உறுமெனப்பட்டு முத்தியென்பதின்றாய் முடியுமாகலானும் அது பொருந்தாது.

இனி, உயிரினிலக்கணத்தை,

> "அசித்தரு வியாப கம்போல் வியாபக மருவ மின்றாய்
> வசித்திட வரும்வி யாபி யெனும் வழக் குடைய னாகி
> நசித்திடா ஞானச் செய்தி யநாதியே மறைத்து நிற்கும்
> பசுத்துவ முடைய னாகிப் பசுவென நிற்கு மான்மா".

என்னுந் திருவாக்கா னுணர்க. இச் செய்யுட்குத் திருவாவடுதுறையி லெழுந்தருளிச் சித்தாந்த பாநுவாய் விளங்கிய ஸ்ரீ சிவஞான முனிவரர் எழுதிய உரை வருமாறு :

ஒருவாற்றானும் அசித்தாதலரிய வியாபகப் பொருள்போல ஔபச்சிலேடிக வியாபகமாதலும், அதுபற்றி அதிசூக்கு மசித்தாதலுமின்றி அதுவதுவாய் வசிப்புண்ணும் வியாபகமாதலும், அநாதியே பசுத்துவமெனப்படும் ஆணவமலத்தின் மறைப்புண்டு கிடக்கும் இச்சாஞானக் கிரியைகளையுடைத்தாய்ப் பசுவெனப்படுந் தூலசித்தாதலுமுடையது உயிர். எ–ம்.

இங்ஙனங் கூறப்பட்ட ஆன்மா இலக்கத்தா லளவுபடுத்தற்கரியவாய், கேவலம், சகலம், சுத்தம் என்னும் மூன்றவத்தைகளையடைந்து நிற்கும். சீவான்மாக்கள் அளவில்லாதனவென்பதை மாணாக்கர்க் கொருசிறிது விளக்குதும். எழுவகைத் தோற்றமாய்க் காணப்படுகிற சீவவர்க்கங்களில் அறிவின் முதிர்ச்சியைப் பெற்றவைகளை விட அறிவு முதிராதவைகளே மிகுதிப்பாடுடையனவென் றறிகின்றோம். இப்பொழுது நம் (பிரிட்டிஷ்) ராஜாங்கத்தில் ஜனசங்கியையும், ஆடு, மாடு, குதிரை முதலியவற்றின் சங்கியையும் செய்து வருகின்றார்கள். பூர்வகாலத்திலும் அரசர்களுக்குரிய நால்வகைச் சேனைகளாகிறயானை, குதிரை, தேர், காலாள் என்பன கணிக்கப்பட்டு வந்தமையை இதிகாச

புராணங்களினாலறிகின்றோம். ஆனால், எறும்பு முதலிய சிறு ஜெந்துக்களைக் கணிக்க விரும்பின் அஃதெவ்வாற்றாது மியலுவதாமோ? அம்மட்டோ? ஒவ்வொரு தூல சரீரங்களையுங் கொண்டு செலுத்துமுயிர்கள் ஒவ்வொன்றாயிருக்க, ஒவ்வொரு சரீரத்தினுள்ளும் எண்ணிலாத ஜீவஜெதுக்கள் வசிக்கக் காண்கின்றோம். பரமாத்மாவுக்குச் சரீரமாக வேதத்தின் கட் கூறப்படுகிறபிரபஞ்சமானது நமக்கு வாசஸ்தானமாதல்போல பெருவியப்பே! அன்றியும் ஒரு சிறு வித்தினின்றுந் தோன்றியதோர் ஆலமரத்திற் கோடிக்கணக்கான வித்துக்கள் உண்டாகின்றன. வித்துக்களெல்லாந் தம்மகத் துயிரைடையனவாதலின் அவ்வுயிர்களெல்லாம் எவ்வாறம் மரத்தையடைந்தன? மண், நீர், காற்றுக்களின் மூலமாகவே அடைந்தனவாதல் வேண்டும். ஆகவே பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்ற பஞ்ச பூதங்களினிடமாகவும் கட்புலனாகாத அளவற்ற ஜீவ அணுக்கள் நிறைந்திருக்க வேண்டுமென யூகிக்கப்படுதலால் ஜீவான்மாக்கள் அளவில்லாதவையென்பதில் ஐயமில்லை. இனிச், சீவான்மாக்களடையும் அவத்தைகளில் கேவலமாவது ஆன்மாக்கள் சர்வசங்காரகாலத்து அசுத்த மாயாகாரணத்திலே யொடுங்கிச் சிருட்டிதொடங்கிச் சர்வசங்காரம் வரை ஆன்மாக்கள் தத்துவங்களோடு எண்பத்து நான்கிலக்ஷயோனி பேதங்களிற் பிறந்திறந் துழல்வது. சுத்தமாவது கேவலசகலப்பட்டு பிறந்திறந்துழலும் ஆன்மாக்கட்கு மலபரிபாகமும், இருவினையொப்பும், சத்திநிபாதமும், குருவருளும் உண்டாக அவை திருவருளைக் கூடுவது இவற்றை,

> *"கேவல சகல சுத்த மென்று மூன் றவத்தை யான்மா*
> *மேவுவன் கேவலந்தன் னுண்மைமெய் பொறிக ளெல்லாங்*
> *காவலன் கொடுத்த போது சகலனா மலங்க ளெல்லா*
> *மோவின போது சுத்தமுடையனும் பவந்து டைத்தே".*

என்பது முதலிய சிவஞானசித்தியார்ச் செய்யுட்களானுணர்க.

(தொடரும்)

தமிழ்த் தாத்தா உ.வே.சாவின் வாழ்க்கையைச் சுருக்கமாக எடுத்துரைத்தார். உ.வே.சா. சேலம் ராமசாமி முதலியாரைச் சந்தித்தபோது, 'பழங்காலத்து நூல்களான சங்கப் பாடல்களைப் படித்திருக்கிறீர்களா' என்று உ.வே.சா.விடம் கேட்ட கேள்வியே நம் தமிழ் இலக்கிய வரலாற்றின் திசைவழியைத் தீர்மானித்த கேள்வியாக அமைந்தது என்று கூறி விளக்கினார். தமிழை, 'தா! தா' என்று கேட்டு வாங்கியதாலேயே தாத்தாவானார் உ.வே.சா என்று புதுவிளக்கம் கொடுத்துப் பேசிய பேராசிரியர் அருணன், நாணயத்தின் இரு பக்கங்கள் போல் இருந்த சங்ககாலச் சமுதாயத்தின் வளத்தையும் வறுமையையும் யதார்த்த நிலையில் விளக்கினார். சங்க இலக்கியங்களை, இலக்கிய நயம், கருத்து, தத்துவம் என்றமூன்றநிலைகளிலும் அணுக வேண்டும் என்று அறைகூவல் விடுத்தார். 'இன்னா தம்ம இவ்வுலகம் இனிய காண்க அதன் இயல்புணர்ந்தோரே' என்ற சங்க இலக்கியச் சிந்தனையைப் பதிவு செய்தார்.

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கச் செயலர் ஸ்ரீதர் அவர்கள் நன்றி கூறினார்.

ஆட்சிக் குழு உறுப்பினர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள், முற்போக்கு எழுத்தாளர் சங்க உறுப்பினர்கள் மற்றும் பலர் கருத்தரங்கில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

டாக்டர் உ.வே.சா. அட்டைப்படம், வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம் ஆகியவை வருகை புரிந்தோருக்கு வழங்கப்பட்டன. மேலும் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் சார்பில் தமிழ்ச் சங்க நூலகத்திற்கு முப்பதுக்கும் மேற்பட்ட நூல்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


தொடர்பு முகவரி :

**ஆசிரியர், செந்தமிழ்,**

**மதுரைத் தமிழ்ச்சங்கம்,**

**மதுரை–625001.**

தொலைபேசி : 0452-6575615

# ஆசிரியர் குழு

முனைவர் திரு. சுப. அண்ணாமலை
முனைவர் திரு. தமிழண்ணல்
பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்
டாக்டர் திரு. ந. சேதுராமன்
முனைவர் திரு. ம.ரா.போ. குருசாமி
முனைவர் திரு. அ.அ.மணவாளன்
முனைவர் கதிர் மகாதேவன்
முனைவர் நா. பாலுசாமி
முனைவர் பெ. சுயம்பு
முனைவர் திரு. அ. தட்சிணாமூர்த்தி
இராசா திரு. முருகதாஸ் தீர்த்தபதி
முனைவர் திரு. செ. கந்தசாமி
முனைவர் திரு. க. சின்னப்பா

அனுப்புநர்,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை- 625001.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 625001.
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,